2017 மே 29
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 03 · பக்கங்கள் 12 · மணி 03 · ஒளி 080

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY · නවමණි දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



அந்த பேயை கட்டிப்போடுங்கள்

09»



மல்லவப்பிட்டி தாக்குதல்

09»



கவுண்டி கிரிக்கெட்டில் சங்கா புதிய சாதனை

12»



# 5 இலட்சம் மக்கள் வெள்ளத்தால் நிர்க்கதி

## 12 மாவட்டங்களில் வெள்ளம், மண்சரிவு

## இறந்தோர் எண்ணிக்கை 151 ஆக உயர்வு

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் கடந்த நான்கு நாட்களாக தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 151ஆக தற்போது உயர்வடைந்துள்ளது.

மேலும், ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 124 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 42 ஆயிரத்து 299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 24 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக 15 மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் காணாமல் போயுள்ள 111 நபர்களைத் தேடும் பணிகளும் இராணுவம் உள்ளிட்ட தரப்பினரால் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், நேற்று மாலை வரை கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டமே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், அம் மாவட்டத்தில் 71 பேர் பலியாகியுள்ளதோடு, 16,389 குடும்பங்களைச் சேர்ந்த 69,350 பேர் பாதிக்கப்பட்டும் 20 பேர் காணாமல்போயும், 42 வீடுகள் முழுமையாக சேதமடைந்தும் ஐவர் காயமடைந்தும் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட 7642 குடும்பங்களைச் சேர்ந்த 33,248 பேர் தற்போது 134 நலன்புரி முகாம்களில் பாதுகாப்பான முறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

11 »»»»

## தனியாக சிறை செல்ல மாட்டேன்

### மறைவிடத்திலிருந்து ஞானசார தேரர் பேட்டி



பொலிஸாரால் தேடப்பட்டுவரும் பொதுபலசேனாவின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமறைவாகியிருக்கும் இடத்திலிருந்து

11 »»»»

## வியாங்கல்லை மண்சரிவு; 7 சிறுவர்கள் பலி 4 சடலங்கள் மீட்பு



அகலவத்தை வியாங்கல்லை முஸ்லிம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட மண் சரிவினால் ஏழு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் நான்கு பேரது சடலங்கள் மீட்கப்பட்டு சனியன்று வியங்கல்லை ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஏனையோர்களின் சடலங்களைத் தேடும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

11 »»»»

## உண்ணாவிரதத்தை கைவிட்டனர்: பலஸ்தீன சிறை கைதிகள்



11 »»»»

## அரச செலவில் இறுதிக் கிரியைகள்

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்த மக்களின் இறுதிக் கிரியைகளை அரச செலவில் மேற்கொள்வதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு

11 »»»»

## வெள்ள பாதிப்புற்றோருக்கு அமெரிக்க, இந்திய, பாக். உதவிகள்



■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசின் உதவிகள் கிடைத்துள்ளன.

அந்தவகையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான அமெரிக்க நிதி மற்றும் அமெரிக்க வெளிநாட்டு அனர்த்த உதவி ஆகியவற்றின் கீழ் 15 மில்லியன் ரூபா நிதியுதவியை

11 »»»»

## நாட்டில் பல பகுதிகளில் இன்று முதல் கடும் மழை

### பலத்த காற்றும் வீசலாம்

### வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் இன்று முதல் கடுமையான மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, புத்தளம், திருகோணமலை, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளின் கரையோரப் பிரதேசங்களில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால்

11 »»»»

## தந்துரை பிரதேசத்தில் பதற்றநிலை தணிவு

### 3 பேர் கைது

■ இக்பால் அலி

முகநூலில் புத்த பெருமானை விமர்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு தந்துறை

11 »»»»

# ஞானசார தேரரின் கொட்டம் அடக்கப்படவேண்டும்

## தொழிற்சங்கவாதி லோகநாதன் வலியுறுத்து

(ஏ.எல்.எம். சலீம்)

நாட்டில் விஸ்வரூபமெடுத்திருக்கும் இனவாதம், மதவாதம், வெறித்தன செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். ஞானசார தேரர் போன்றவர்களின் சிறுபான்மை சமூகங்களுக்கெதிரான கொட்டம் அடக்கப்படவேண்டும் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பில் தலைவர் லோகநாதன் விடுத்துள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாதம், மதவாத வெறித்தன செயற்பாடுகள் பெரிதும் கவலையளிப்பதாகவேயுள்ளது. குறிப்பாக சகோதர சிறுபான்மையின முஸ்லிம்களுக்கெதிராக அண்மைக்காலமாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அராஜக வன்முறைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக அமைந்துள்ளன.

நல்லாட்சி அரசை மலரச் செய்யும் நோக்குடன் மறைந்த சோபித தேரர் ஒன்று சேர்த்த அமைப்பில் எமது சங்கமும் இணைந்து கொண்டது. என்ற வகையில் நடக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியையும் விசனத்தையும் தருகின்றன. இந்த நாட்டில் சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருமித்த வைராக்கியத்துடனும் நம்பிக்கை கொண்டுமே இந்த நல்லாட்சி அரசு நாட்டில் மலர வழிவகுத்தனர்.

ஆனால் இந்த பெரு நம்பிக்கைக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் இனவாதம், மதவாதம் செயற்பாடுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. அடிக்கடி ஞானோதயம் ஏற்படுபவர் போல் ஞானசார தேரர் சிறுபான்மை இன மக்களுக்கெதிராக நச்சுக்கருத்துக்களை வெளிபடுத்தி வருகின்றார்.

குறிப்பாக முஸ்லிம் மக்களின் உயிரிலும் மேலான அல்லாஹ்வையும் கண்மணி றசூல் (ஸல்) அவர்களையும் கூட நிந்திக்குமளவிற்கு இந்த ஞானசார தேரரினதும் அவருக்குப்பக்கவாத்தியம் இசைக்கும் இராவணபலய போன்ற இனவாத அமைப்புகளின் செய்பாடுகளும் அமைந்துள்ளன.

இரவுவேளைகளில் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மீதும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீதும் கோழைத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவது வன்மையாகக்கண்டிக்கத்தக்கது. இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நாம் வாழாதிருக்க முடியாது.

எனவே நல்லாட்சி அரசு இத்தகைய இனவாத செயற்பாடுகளை முற்றாக ஒழிக்க முன்வருவதுடன் பின்புல சக்திகளின் தூண்டுதலால் இன, மத வெறியாட்டம் ஆடும் சூத்திரதாரிகள் மீது காத்திரமான நடவடிக்கைகளை எவ்வித தயக்கமுமின்றி எடுக்க வேண்டும்.

நல்லாட்சி அரசு மீது இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை.எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என இவ்வாறு குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

29.05.2017 - திங்கள்

**தொழுகை நேரங்கள்**

| ஸ.முடிவு | சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|
| 4.16 | 4.32 | 12.09 | 3.35 | 6.23 | 7.39 |

கிழக்குமாகாணம் 6 நிமிடங்கள் முற்படுத்தி கணிப்பிடவும்

## இரத்தினபுரி மாவட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை

(ஏ.ஏ.எம்.பாயிஸ் - எம்.எல்.எஸ்.மொஹம்மத்)

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக இரத்தினபுரி மாவட்ட பாடசாலைகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை (26) வழங்கப்பட்ட விடுமுறை இன்று திங்கட்கிழமை(29) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண கல்வி தொழில்நுட்பத்துறை அமைச்சர் சட்டத்தரணி பானு முனிப்பிரியவின் அறிவுறுத்தலுக்கமைய மாகாண கல்வியமைச்சு நடத்திய விசேட கலந்துரையாடல் கூட்டத்தின் பின் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் நாளை செவ்வாய்க்கிழமை (30) வழமை போல் பாடசாலைகள் இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் வரை அவை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட அறிவித்தல்கள் ஊடகங்கள் மற்றும் உரிய கல்வியதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அந்நஹ்மா அறபுக்கல்லூரி மாணவன் மாலைதீவு பயணம்



(மருதமுனை நிருபர்)

மருதமுனை அந்நஹ்மா அறபுக்கல்லூரியைச் சேர்ந்த ஷரீஆத்துறை மாணவன் நிந்தவூரைச் சேர்ந்த அல்-ஹாபிழ் ஏ.பி.எம்.சிம்லி கடந்த 24 ஆம் திகதி மாலைதீவுக்குப் பயணமானார். இவர் மாலைதீவில் கிறாவறு என்ற தீவில் அமைந்துள்ள ஜும்ஆ பள்ளிவாசலில் புனித றமழான் மாதம் முழுவதும் தறாவீஹ் தொழுகை நடாத்தவுள்ளார். இவர் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் காணப்பட்ட வெள்ளவத்தை மயூரா பிளேசில் உள்ள முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் நிருவாக சபை உறுப்பினர்களின் அயராத முயற்சியின் காரணமாக நலன் விரும்பிகள், தனவந்தர்களின் உதவியுடன் சுமார் ஆறு கோடி ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு விஷேட துஆப் பிரார்த்தனையுடன் கடந்த 25ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மேற்படி நிகழ்வு பள்ளிவாசலின் தலைவர் எம்.எஸ்.ஸலாஹுதீன் தலைமையில் இடம் பெற்றது இதன்போது வரவேற்புரையை பிரதித் தலைவர் அப்துல் ஜப்பார் நிகழ்த்தினார் விஷேட உரையை அக்ரம் ஹாபிஸ் நிகழ்த்தியதுடன் துஆப் பிரார்த்தனையை அப்துல் ஹஸன் மௌலவி நிகழ்த்தியதுடன் நன்றியுரையை ஜே. பெறோஸ் கிஷாக்னி வழங்கினார். இந்நிகழ்வில் குறித்த பள்ளிவாசலின் ஜமாத்தார்கள், ஏனைய பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், மார்க்க அறிஞர்கள், புத்தி ஜீவிகள் மற்றும் அமைச்சர்களான றிஷாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# முக்கிய விவகாரங்கள் குறித்து கிழக்கு முதல்வர் பிரதமர் சந்திப்பு



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கிழக்கு முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ஆகியோருக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. அலரி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர், அரசாங்க அதிபர்கள், காணி ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கின் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்ததுடன் 1700 பட்டதாரிகளுக்கு உடன் நியமனம் வழங்க நிதி ஒதுக்கீடுகளை வழங்கினமை தொடர்பில் கிழக்கு முதலமைச்சர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

அதைப் போன்று அடுத்த கட்டமான நியமனங்களுக்கும் துரிதமாக நிதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிழக்கு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் கிழக்கின் ஏனைய துறைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான ஆவணங்களையும் பிரதமரிடம் கையளித்தார்.

இதேவேளை நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இனவாத செயற்பாடுகள் தொடர்பிலும் கிழக்கு முதலமைச்சர் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் இவ்வாறான சம்பவங்கள் சிறுபான்மையினர் மத்தியில் பாரிய அச்சத்தை தோற்றுவித்துள்ளதாகவும் கிழக்கு முதலமைச்சர் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

சமூகங்களிடையேயான நல்லுறவை குழப்ப நினைக்கும் வன்முறையைத் தூண்டுவோருக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போது எடுத்துவருவதாகவும் எந்தவொரு இனத்துக்கும் அநீதி ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கிழக்கு முதலமைச்சரிடம் உறுதியளித்தார்.



ஒலுவில் அல்-மதீனா வித்தியாலயத்தில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் கட்டுறு பயிலுனர் ஆசிரியராக கடமையாற்றி விடைபெற்றுச் செல்லும் பயிற்சி ஆசிரியை எம்.ஏ. மஸ்றூபா பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களினால் பாராட்டி கௌரவித்து பரிசுப் பொதி வழங்குவதை படத்தில் காணலாம்.

(ஒலுவில் நிருபர் அமீர்)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரிப்பு

(ஏறாவூர் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம், மண்சரிவு போன்றவற்றால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி இருக்கும் மக்களுக்கு உதவுவதற்காக உணவுப் பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றைச் சேகரிக்கும் மாபெரும் நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நேற்று ஏறாவூர் நகரெங்குமுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று நிவாரண சேகரிப்பில் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளதாக செயற்பாட்டாளரும் சமூக சேவையாளருமான எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்தார்.

நிவாரண சேகரிப்பு நடவடிக்கையில் ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், ஜம்மிய்யத்துல் உலமாசபை.

சிவில் அமைப்புக்களின் ஒன்றியம், தோழமைக் கழகம், விளையாட்டு கழகம், அல் ஹஷ்ஸால் அமைப்பு, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் ஈடுபடுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மத்திய அரசு கிழக்கு மாகாண சபையை புறக்கணிப்பு

## தவிசாளர் சந்திரதாஸ கலப்பதி



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் மத்திய அரசினால் மிகக் குறைந்தளவான நிதியே ஒதுக்கப்படுவதாக அம்மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாஸ கலபதி தெரிவித்தார்.

மாகாணசபை தவிசாளர்கள் சங்கத்தின் 7ஆவது தவிசாளர்கள் மாநாடு கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண சபை பேரவைச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இம்மாநாட்டில் நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட பல அரச அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். இந்த மாநாட்டுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண சபைத் தவிசாளர், கிழக்கு மாகாண சபையைத் தவிர நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்கும் மத்திய அரசினால் கூடியளவு நிதி வழங்கப்படுகின்றது.

ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில், கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் மத்திய அரசினால் மிகக் குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டு வருவது வெளிப்படையான விடயம்.

இருப்பினும் நாங்கள் கிடைக்கின்ற தொகையினை வைத்து வெற்றிகரமாக எமது மாகாண சபையை நிலை குலையாது நடாத்திக் கொண்டிருக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

### இரத்தினபுரி மாவட்டத்தில்

## மின்சாரம் தொலைபேசி துண்டிப்பு: குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(ஏ.ஏ.எம்.பாயிஸ் - எம்.எல்.எஸ்.மொஹம்மத்)

இரத்தினபுரி பகுதியில் ஆங்காங்கே ஒரு சில தாழ் நிலங்களில் நீர் தேங்கிக்காணப்பட்டாலும் நகரில் முற்றாக நீர் வடிந்து சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் இரத்தினபுரி நகர நுழைவாயில்களில் தடைப்பட்டிருந்த மண்திட்டுக்கள் கற்கள் ஏனைய தடைகள் முப்படைகள் மற்றும் மீட்புப் பணியாளர்களால் அகற்றப்பட்டபின் கொழும்பிலிருந்து பதுளை மொனராகலை பாணந்துறைக்கான போக்குவரத்துக்கள் சீராகின.

எனினும் இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதுடன் நிரந்தர தொலைபேசிச் சேவை செயலிழந்துள்ளது.மேலும் மின்சார துண்டிப்பு சீர் செய்யப்படாமையினால் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வது கடினமானதையால் குடிநீர் விநியோகத்தை நீர் விநியோக சபை முற்றாக துண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை ஆயிஷாவில் விஷேட ரமழான் நிகழ்ச்சி



(ஓட்டமாவடி எச்.எம்.எம்.பர்ஸான்)

புனித ரமழானை முன்னிட்டு வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் 'ரமழானை வரவேற்போம் எனும் விஷேட நிகழ்ச்சியொன்று கடந்த 26 வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் எம்.ரீ.எம். பரீட் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பேச்சாளர்களாக ஓட்டமாவடி மஸ்ஜிதுல் ஸலாம் பள்ளிவாயலின் பேஷ் இமாம் ரீ.ஏ. மஜீத் (ஷர்கி) மற்றும் மௌலவியா ஆசிரியை எம்.ரீ.மசாகிரா ஆகியோர்கள் கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் நோன்பின் சட்ட திட்டங்கள், நோன்பு காலங்களில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதி முறைகள் பற்றியும் குர்ஆனின் சிறப்புக்கள் மற்றும் அதனைக் கற்றுக்கொள்வதன் மகத்துவம் பற்றியும் பேசினார்கள்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக கலந்து கொண்டவர்களுக்கு பாடசாலையினால் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வியங்கல்லை,பலாந்தை கிராமங்கள்
# இன்னும் வெள்ளத்தில் தொடர்புகள் துண்டிப்பு



களுத்துறை மாவட்டத்தில் வெள்ளப் பெருக்குக்குள்ளாக்கப்பட்டுள்ள வியங்கல்லை, பலாந்தை முஸ்லிம் கிராமங்கள் இன்னும் நீரில் மூழ்கி கிடப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கிராமங்களுக்கு வள்ளங்களினூடாக மட்டுமே பயணிக்கலாம்.

வியங்கல்லையில் 186 வீடுகள் முற்றும் சேதத்துக்குள்ளாகியிருப்பதாக வியங்கல்லை பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் குழுவின் தலைவர் சஹ்ரான் முஹம்மத் தெரிவித்தார்.

நேற்றாகும் போது 3 அடிவரை தண்ணீர் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குகுலே கங்க நீர்ப்பாசனத்திட்டத்தின் நீர்த்தேக்கம் திறந்து விடப்பட்டதனாலே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

வியங்கல்லைக்கு இதற்கு முன்பும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இப்படி மோசமான ஒரு வெள்ளப்பெருக்கினை நாம் கண்டதேயில்லை என்று சஹ்ரான் தெரிவித்தார்.

களுத்துறை, அட்டுளுகமை, பேருவளை, தர்காநகர் மற்றும் சீனன்கோட்டை பிரதேசங்களிலிருந்து தினமும் மாறிமாறி சமைத்த உணவு அனுப்பி வைக்கப்படுகின்றது. இதற்காக நாம் அப்பிரதேச மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களாக பிரதேசத்தில் மின்சாரம் செயலிழந்துள்ளது.

## அவசர உதவிகளுக்காக
## அழைக்கலாம்

அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் ஏதேனும் அவசர உதவிகளின் தேவையிருந்தால் உடனடியாக தொடர்பு கொள்வதற்காக பாதுகாப்பு படைகளின் பிரதானியின் அலுவலகத்தின் அவசர தொடர்பு இலக்கங்கள் இரண்டு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படிப்படையில், 0112674535 மற்றும் 0112674502 ஆகிய இரண்டு இலக்கங்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்த முடியும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருப்பதாகவும், அவசர தேவைகளுக்காக இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்த அலுவலகம் கூறியுள்ளது.

## பொலிஸ் இப்தார் நிகழ்வு
## நாளை நடைபெறாது

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு நாளையதினம் (30) மாலை 5 மணியளவில் ஒல்கட் மாவத்தையிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த இப்தார் நிகழ்வு அன்றையதினம் நடைபெறாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

அதிக மழை, வெள்ள அனர்த்தம் மற்றும் மண்சரிவு அபாயம் என்பவற்றால் நாட்டின் பல மாவட்டங்களில் மக்கள் பாதிப்படைந்துள்ள காரணத்தால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
# முன்வந்து உதவுங்கள்
### றிஷாத் வேண்டுகோள்



நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினாலும் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவினால பாதிப்புற்ற மக்களுக்கு வசதிபடைத்தவர்கள் உதவவேண்டுமென அமைச்சர் றிஷாத் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தென்னிலங்கையில் பல மாவட்டங்களில் மக்கள் பாதுகாப்புக் கருதி வெளியேறிபல்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு கஷ்டப்படும் மக்களுக்கு முடிந்தவரை கைகொடுப்பது நமது கடமையாகும் என அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக ஏற்பட்ட அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார்.

மாத்தறை, களுத்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளுடனும் அமைச்சர் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் நிலவரங்கள் மற்றும் தேவைகள் குறித்து எடுத்துரைத்தார்.

காலி மாவட்ட கிராமங்களிலுள்ள மக்கள் இன்னும் வெளியேற முடியாமல் நிர்க்கதியான நிலையில் இருப்பதையும் அவர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டி நிவாரணப்பணியாளர்கள் இங்கு மீட்பு முயற்சியை துரிதப்படுத்துமாறு வேண்டிக் கொண்டார்.

## வெள்ளத்தினால் அழிந்த பரீட்சை சான்றிதழ்களை இலவசமாக பெறலாம்

வெள்ள அனர்த்தத்தினால் அழிவுக்குள்ளான அனைத்து பரீட்சை சான்றிதழ்களையும் ஒரு நாள் சேவையின் கீழ் மீண்டும் பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் ஜெனரால் டபிள்யு. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

குறித்த அனர்த்த நிலைமை காரணமாக குறித்த பரீட்சை சான்றிதல்கள் வீணாகிவிட்டதாக தத்தம் கிராம உத்தியோகத்தர்களிடம் பெற்றுகொள்ளப்பட்ட கடிதத்தின் கீழ் பரீட்சை சான்றிதழ்களை இலவசமாக பெற்றுகொள்வதற்கு நடவடிக்கைகள் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப் படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

## மீட்பு பணியில் பலியான விமான சிப்பாய்க்கு பதவி உயர்வு





மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட விமானப்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

கொஸ்முல்ல தூலிஅல்ல தேயிலைத் தொழிற்சாலைக்கு சொந்தமான விடுதியில் சிக்குண்டிருந்த பெண்களை மீட்பதற்கு முற்பட்ட சந்தர்ப்பத்தில், ஹெலிகொப்டரின் வயர் அறுந்து விழுந்த சந்தர்ப்பத்தில் குறித்த விமானப்படை சிப்பாய் உயிரிழந்தார்.

மினுவன்கொட, கொட்டுகொட பகுதியில் வசிக்கும் 38 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.எம்.எஸ்.யாப்பாரத்ன என்பவரே மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் உயிரிழந்தார்.

மேலும், இவருக்கு இலங்கை விமானப் படையின் வாரண்ட் அதிகாரியாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வத்தளை, களனிக்கு இன்று நீர் தடை

வத்தளை மற்றும் களனி ஆகிய பிரதேசங்களின் நீர் பகிர்ந்தளிக்கப் படும் நீர்க்குழாயில் ஏற்பட்டுள்ள நீர்க் கசிவினை திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இன்று காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை 6 மணித்தியாலய காலத்துக்குள் நீர்வெட்டு அமுல்ப்படுத்தப் படும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது.

இதன்காரணமாக களனி பிரதேசத்திலுள்ள அனைத்து இடங்களும் மற்றும் பேலியகொட நகர சபை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள், வத்தளை நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இவ்வாறு நீர் விநியோக தடை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பாடசாலை மூடுவது தொடர்பான முடிவை அதிபர்கள் எடுக்கலாம்
### கல்வி அமைச்சர் அறிக்கை



சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகள் திறக்கப்படுவது மற்றும் மூடப்படுவது குறித்த முடிவுகளை அதிபர்களால் எடுக்க முடியும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அனர்த்த நிலைமை காரணமாக தமது பாடசாலகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அபாய நிலைமை குறித்தும் அவதானமாக இருப்பது குறித்த அனுமதியை கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு வழங்கியுள்ளது.

அத்தோடு, குறித்த தீர்மானம் தொடர்பில் மாகாண பாடசாலை என்றால் மாகாண மற்றும் வலய கல்வி அதிகாரிகளுக்கும் மற்றும் தேசிய பாடசாலை என்றால் தேசிய பாடசாலை கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்து தீர்மானங்களை எடுக்கவேண்டும் என அனைத்து அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் தொடர்பிலான தகவல்களை கூடிய விரைவில் தமக்கு பெற்றுக் தரும்படி அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலை பிள்ளைகள் தொடர்பில் தேவையான பாடப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் அத்தியவசியப் பொருட்களை பெற்றுகொடுப்பதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தகவல்களை பெற்றுகொள்ள தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.



நாட்டில் இடம்பெற்றுவரும் முஸ்லிம்களுக்கெதிரான இனவாதச் செயற்பாடுகள் குறித்து களனி விஹாரையின் பிரிவேனாதிபதியும் சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தருமான கம்புருகமுவே வஜிர தேரரை சந்தித்து முஸ்லிம் தூதுக்குழுவொன்று கலந்துரையாடியது. இதில் பங்கேற்ற ஜம்மியத்துல் ஷபாப் பிரதிப் பணிப்பாளர் மௌலவி எஸ்.எஸ்.எம்.தாஸிம், சமூக செயற்பாட்டாளர் தஹ்லான் மன்சூர், ஷபாப் இணைப்பாளர் வாரித் ஆகியோரை படத்தில் காணலாம்.


புனித ஹஜ் 2017



இன்ஷா அல்லாஹ்

ஒகஸ்ட் மாதம்

புறப்படுதல் : 17-08-2017

திரும்புதல் : 15-09-2017

NO AZEEZIYA |SHORT PACKAGE AVAILABLE

ஹஜ், உம்றாவில் பல தசாப்த அனுபவமுள்ள உலமாப்பெருந்தகையின் நேரடி வழிகாட்டல்

மக்கா, மதீனா, ஸியாரா ஏற்பாடுகள் உணவு, பானங்கள் உட்பட அனைத்து வசதிகளும்

புனித ஹரம்ஷரீபுக்கு அருகில் தங்குமிட வசதி

5 Star - Makkah Hilton for VIP Pack, 3 Star - Misfala (Behind Hilton) Normal Pack

நேரடி சவூதி அரேபியா விமான சேவை மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் ஜம்ராவுக்கு மிக அருகாமையில்

Direct Flight : Saudia - Sri Lankan only

Mina - Arafa between 1 to 20 Muttawiffy with VIP Facilities

தொடர்புகளுக்கு

MOULAVI M. A. M. IFLAL (BARI) B.A (Hons)

கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப்

011 2395356/8 | 0777 310 845 | 0777 556 200

IATA Airline Ticketing Agent & Tour Operators

SKY WORLD TRAVELS (PVT) LTD.

F-21, People's Park Complex, Colombo-11 | 0112 395356

நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
29TH MAY 2017 - MONDAY

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேசக் கரம் நீட்டுவோம்

கடந்த சில தினங்களாகப் பெய்த மழை காரணமாக நாட்டில் ஐந்து லட்சம் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 மாவட்டங்களில் பெய்த கடும் மழை காரணமாக நேற்று வரை 146 பேர் உயிரிழந்ததோடு, 112 பேர் காணாமல் போயுள்ளனர்.

முழுநாட்டையும் சோகத்துக்குள்ளாக்கியுள்ள இந்த அனர்த்தம் காரணமாக முழு நாடுமே ஸ்தம்பித்திருப்பது போன்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதேநேரம், தனியார் அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக உதவிகளைத் திரட்டி வருகின்றன. இந்த ஆண்டில் நாடு பல அனர்த்தங்களை எதிர்நோக்கிய நிலையில் வெள்ளப்பெருக்கு காரணமாக பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதனைக் கட்டுப்படுத்த இயலாத போதும் மண்சரிவு தொடர்பாக முன் எச்சரிக்கை விடுத்து மக்களை அவ்வாறான இடங்களிலிருந்து அகற்றுவதற்கு அரசுமுன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த அனர்த்தத்தினால் உயிரிழந்தோர் எண்ணிக்கையைக் குறைத்திருக்கலாம்.

இருநாள் மழையில் பத்துக்கும் மேற்பட்ட மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. இறந்தவர்களில் அதிகமானோர் மண்சரிவினாலே இறந்திருக்கிறார்கள். அரசு மண்சரிவுள்ள பிரதேசங்களை அடையாளங்கண்டு அவ்வாறான இடங்களிலிருந்து மக்களை மாற்று இடங்களில் குடியேற்றுவது குறித்து விசேட கவனஞ் செலுத்துவதன் அவசியத்தை இந்த உயிர்ப்பலிகள் உணர்த்துகின்றன.

இலங்கையில் மண்சரிவு ஒரு தொடர்கதையாக மாறி வருகின்றது. அரசு இந்த விடயம் குறித்து கூடுதலான கவனஞ்செலுத்துவது அவசியமாகும்.

அதேநேரம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் சுற்று நிருபங்களைப் பார்த்துக் கொண்டிருக்காது செயற்படுமாறு ஜனாதிபதியும், பிரதமரும் அதிகாரிகளை கேட்டுள்ளனர். முதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கு தடையின்றி நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிரதேச மக்கள் பிரதிநிதிகள் களத்திலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். கலாசார பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும களுத்துறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுப்பதில் ஆற்றிவரும் பங்களிப்பு பாராட்டுக்குரியது. மக்கள் பிரதிநிதிகளுக்கு பாலித தெவரப்பெரும முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

இதேநேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் களுத்துறைப் பிரதேசத்தில் பல முஸ்லிம் அமைப்புக்கள் சிறப்பான பங்களிப்பினைச் செய்து வருகின்றன. வியங்கல்லை, பலாந்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நோன்பு நோற்பதற்கு விசேட ஏற்பாடுகளை பேருவளை, அட்டுளுகமை, தர்காநகர், சீனன்கோட்டை முஸ்லிம்கள் செய்துள்ளமை பாராட்டுக்குரியது.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத பகுதியிலிருந்து நேசக்கரம் நீட்டுவது சகலரதும் கடமையாகும்.

---

# அந்த பேயை கட்டிப்போடுங்கள்



தமிழில்: ஆதில் அலி சப்ரி

30 வருட யுத்தத்தின் பின்னர் 8 வருடங்களே கடந்துள்ளன. இந்த 8 வருட காலத்திலோ, எதிர்வரும் ஒரு தசாப்த காலத்திலோ 30 வருட யுத்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இன முரண்பாடுகளில் இருந்து இலங்கையில் மகிழ்ச்சியாக மீண்டு வர முடியுமான நிலையொன்றை காணமுடியாதுள்ளது.

அதேநேரம், இன்னொரு பேய் புதிய சுற்றொன்றில் பயணத்தை ஆரம்பித்துள்ளது. ஒரே நாட்டில் நூற்றுக்கு 12வீதமாக வசிக்கும் சகோதர தமிழ் மக்களுடன் நம்பிக்கையின்மை, சந்தேகத்தை உண்டாக்கிக்கொண்டதால் போதுமானளவு பாதிக்கப்பட்ட எமக்கு, மேலும் நூற்றுக்கு 10 வீதமான சகோதர முஸ்லிம் மக்களுடனும் நம்பிக்கையின்மை, சந்தேகத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்றே முயற்சிக்கும் பேய் புதிய சுற்றொன்றில் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் புரட்சிக்கு வந்த. இந்த காவியுடையணிந்த பேய்க்கு ஆட்சியாளர்களின் போதியளவு அனுசரணையும், அங்கீகாரமும் கிடைத்தது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இந்த பேய்க்கு வெளிப்படையாகவே ஆதரவு வழங்கினார். இன் முகத்துடன் அவர்களுடன் உறவாடினார். அவர்களின் கல்விக் கல்லூரிகளின் ஆரம்ப வைபவங்களுக்கு அழைப்பு பெற்றுச் சென்றனர். அவர்களின் மூத்த சகோதர ஆட்சியாளன், இந்த பேய்களின் திட்டத்தின்படி அரங்கேற்றிய நாசகார செயல்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாது பாதுகாத்தார். இறுதியாக, இந்த பலம் பெற்ற பேய் நாடளாவிய ரீதியில் சுதந்திரமாக நடமாடி பல பேரழிவுகளை ஏற்படுத்தியது. அளுத்கமையில் அது ஏற்றிய இனவாத தீயால் சகோதர முஸ்லிம்களின் உடைமைகள் மற்றும் அன்றாட வாழ்க்கை ஒரே இரவில் அழிந்துபோனது. எனினும், அந்த பேய்க்கெதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அந்த பேயின் செயற்பாடுகளால் நாட்டு முஸ்லிம்கள் போதியளவு பாதிக்கப்பட்டு, மனமுடைந்துள்ளனர். மரண பயத்தில் இரவு கண் விழித்து காலம் கடத்தவேண்டிய நிலை அவர்களுக்கு உருவாகியது. அந்த மரண பயத்தில் தொடர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக முழுமையாக முன்னின்றனர். பொது வேட்பாளர் வெற்றிபெறுவதற்கு அதுவும் ஒரு காரணமாகிற்று. பேய் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு புதைகுழி வெட்டிக்கொடுத்தது.

முன்னரைப் போலவே, இன்று அதேபோன்றதொரு நிலைமையே உருவாகியுள்ளது. இன்றும் முஸ்லிம்கள் மரண பயத்தில் உள்ளனர். அவர்களின் வியாபாரஸ்தலங்கள், பள்ளிவாசல், வீடுகளை இனவாதிகள் எந்நேரத்தில் தாக்குவார்கள் என்ற பயத்தில் இருக்கின்றனர். இந்த பயத்துக்கு காரணமாக அமைவதும் அந்த ஒரே பேய் தான். இன்றும் அது சுதந்திரமாக உலாவருகின்றது. நல்லாட்சி அரசாங்கமொன்றை ஏற்படுத்திக்கொண்டதில் சகோதர முஸ்லிம் மக்கள் பயத்திலிருந்து சதந்திரமடைந்தனரா?

இனவாதம், மதவாதம், பாஸிஸவாதம் ஆகியவற்றைப் பரப்பிக்கொண்டு திரியும் பேய் சுதந்திரமாக அன்றி, சிறைச்சாலையொன்றிலேயே இருக்கவேண்டும். முஸ்லிம்களுக்கு போன்றே, அமைதியான சிங்கள மக்களின் கூட்டங்கள், வணக்கஸ்தலங்களுக்கு அத்துமீறி, குழப்பங்களை விளைவித்து, நீதிமன்று முன்னால் பல குற்றச்சாட்டுக்களின் குற்றவாளியாக உள்ளது. நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டுக்கும் ஆளாகியுள்ளதோடு, நீதிமன்றை தட்டிக்கழித்து வருகிறது. அதன் பார்வையில், ஜனாதிபதியும் பிரதமரும் எதனையும் சொல்ல, செய்து கொள்ள முடியாதவர்களே. தான் சட்டத்திற்கும் நீதிமன்றுக்கும் கட்டுப்படேன். இவை அனைத்தையும் விட, சகோதர முஸ்லிம்களின் மதத் தலைவரை மிகக் கீழ்த்தரமாக தூற்றி, இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தி, அடிப்படைவாதிகளை இணைத்துக்கொண்டு இடத்துக்கிடம் சென்றுகொண்டிருக்கிறது. நாடு இன்னுமோர் தடவை இனவாத, மதவாத சண்டையொன்றுக்கு முகங்கொடுத்துள்ளது. எனினும், சட்டமும், பொலிஸும் மௌனம். பிரார்த்தனைகளோடு வேலைகளை ஆரம்பிக்கும் பொலிஸ்மா அதிபர் சட்டத்தை வளைத்து தொடர்ந்தும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுள்ளார். பல்கலைக்கழக மாணவர்களை நாலாபக்கமும் விரட்டி விரட்டியடிக்கும் பொலிஸார், இந்த பேய்க்கு முன்னால் சிலைகளைப் போன்று ஊமையாகின்றனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் நல்லிணக்கம், சமாதானம் தொடர்பில் அதிகம் பேசுகின்றனர். இப்போது அது உண்மையானதா என்று பரிசோதித்து பார்க்கும் நேரம் வந்துள்ளது. சமாதானத்தை நிலைநாட்ட தேவையான பலத்தை பொலிஸாருக்கு கொடுத்துள்ளோம் என்று கூறி நாட்டின் தலைவர்கள் கையைத் தட்டிவிட்டு இருக்கமுடியாது. நாட்டில் இன, மத முரண்பாடுகள் ஏற்படாவண்ணம் அவர்களின் அரசியல் பலத்தைக் காட்டவேண்டும்.

**ராவய வார இறுதியின் ஆசிரியர் தலையங்கம்**

---

# ஊடக பேரினவாதம்

ஏ.ஜே.எம்.நிலாம்

1817 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெல்லஸ்ஸ கிளர்ச்சி ஏற்படக் காரணம் என்ன? சிங்களவர் மட்டுமே தெரிவாகும் முஹாந்திரம் பதவியை ஆங்கிலேயர் ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிமுக்கு வழங்கி பரிபாலனம் செய்ய அனுப்பி வைத்ததேயாகும். அவரை எதிர்த்து மடுகல்லவும் பிலிம தலாவவும் செய்த கிளர்ச்சி அவர்களின் தலைமையால் விரைவாகப் பிரதேசம் முழுதும் பரவியது. கிவுலே கெதர மொஹட்டால புட்டேவே ரட்டேரால, கொஹுகும்புரே ரட்டே ரால மீகஹ பிட்டியேடேரால ஆகிய முன்னிலை வீரர்கள் பின்வாங்காது அஞ்சாமல் போரிட்ட போதும் கிவுலே கெதர மொஹட்டாலவே குறிப்பிடத்தக்கவராக இருந்தார்.

1815 ஆம் ஆண்டு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் ஆங்கிலேயரிடம் பிடிபட்டதால் தமக்கென ஓர் அரசன் இல்லாதிருந்த கண்டி அரசின் சிங்கள இனத்துக்கு சத் கோரளைக்குரிய பஹலகொலஸ்பத்துவே வில்பாவே முதியான்சே அல்லது துரைசாமி அரசனானார். தான் விக்கிரம ராஜசிங்கனின் பரம்பரையைச் சேர்ந்தவன் கண்டியரசு தனக்குரியது என அவன் கூறினான். இதனால் வேறுவழியின்றி மக்கள் மகிழ்வோடு அவனையே அரசனாக ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பதுளை உப அரச அதிபர் மேஜர் சில்வஸ்டர் டக்லஸ் வில்ஸன் இழந்த சுதந்திரத்தை மீளப் பெற சிலர் கிளர்ச்சி செய்யப் போவதாக உளவுத்துறை மூலம் அறிந்துகொண்டார். அதனால், வில்பாவே எனும் துரைசாமியைக் கைது செய்யும்படியும் கிளர்ச்சியை அடக்கும் படியும் ஹஜ்ஜி மரிக்கார் முகாந்திரத்தை அனுப்பிவைத்தார். சிறந்த போர் வீரரான அவரோடு ஒரு படையும் அனுப்பப்பட்டது. எனினும், அவர் கிளர்ச்சியாளர்களிடம் பிடிபட்டு துரைசாமியிடம் அழைத்துச் செல்லப்பட்டு நீதி விசாரணைக்குப்பின் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

(பதுளை பாலித ஆரியவங்ஷ - 05.02.2017 லங்காதீப)

கிளர்ச்சியாளர் ஹஜ்ஜி மரிக்காரைக் கொன்றதால் வெகுண்டெழுந்த ஆங்கில ஆட்சியாளர் கொடூரமாகக் கிளர்ச்சியாளரை அடக்கினர். உப அரச அதிபர் மேஜர் சில்வஸ்டர் கொல்லப்பட்டதும் கூட கிளர்ச்சியானருக்கு மிகப்பெரும் அழிவாக அமைந்தது. தன்னோடு ஒத்துழைத்த பல கிளர்ச்சித் தலைவர்கள் கொடிய நோய்களாலும் ஆங்கிலேயரின் வதைக்கூடங்களாலும் அழிந்து போனதாக கிவுலே கெதர மொஹட்டால அனாதரவானார். பக்கபலமாக இருந்த புட்டாவே ரட்டராலவும் சிறைபிடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் தான் கிவுலே கெதர மொஹட்டாலவைப் பிடித்துத்தருபவருக்கு 500 பகோதி தருவதாக ஆங்கில ஆட்சி பறை முழங்கியது.

தேசப்பற்றுள்ளோர் காட்டிக்கொடுக்க முன்வராத போதும் மாறுவேடம் பூண்டு மக்களோடிருந்த பரணகமையைச் சேர்ந்த சோனகர் இருவர் துப்பு மூலம் வழங்கிய தகவல் கடி அலுத்நுவர பிம் தென்ன பிரதேசத்தில் கிவுலே கெதர மொஹட்டால கைதுசெய்யப்பட்டார். பகிரங்க விசாரணைக்குப் பின் 1818 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

அப்புஹாமி வெலஓயாவுக்கு அக்கரையிலுள்ள பஹரகம எனும் கிராமத்துக்கு போவதை இளமைக்காலத்தில் வழமையாகக் கொண்டிருந்தான். அது சிங்கள மன்னர்களால் காணி வழங்கப்பட்ட பாரம்பரிய முஸ்லிம் கிராமமாகும். அங்குள்ள பிரபுக்கள் மத்தியில் பாத்திமா எனும் அழகிய இளம் பெண்ணும் இருந்தாள். அப்புஹாமி அவளது தந்தையைக் கண்டு உங்கள் மகளை எனக்கு மணமுடித்துத் தாருங்கள் எனக் கேட்டார். இதை மறுக்கமுடியாத பாத்திமாவின் தந்தை காரியம் நிறைவேறாத வகையில் ஓர் உபாயமாக ஒரு நிபந்தனையை விதித்தார்.

அதன்படி ஒரு நிபந்தனையின் கீழ் இதுபற்றி நான் யோசிக்கிறேன் என அவர் கூறியதும், அப்புஹாமி பொறுமை இழந்தவனாக நான் என்ன செய்யவேண்டும் என கேட்டான். நீங்கள் நாளை விடியும் முன் எமது 30 நிலப்பரப்பிலும் அறுவடை செய்தாக வேண்டும் என பாத்திமாவின் தந்தை கூறியதும் 30 அரிவாள்களைத் தாருங்கள் என்ன கேட்டெடுத்த அப்புஹாமி ஏற்றுக்கொண்டவாறே செய்து முடித்தான். வேறு வழியின்றி தந்தை பால் பாத்திரத்தோடு மகளை அப்புஹாமியிடம் அனுப்பி வைத்தார்.

அவள் கொடுத்த அந்த நஞ்சை அருந்தி இறந்த அப்புஹாமியை புதைக்கக் குழித்தோண்டி அவரோடு 30 அரிவாள்களையும் இன்னொரு பொருளையும் போட்டுப்புதைத்தார்களாம். (05.02.2017 லங்காதீப) இவை இலங்கை முஸ்லிம்களை தேசத்துரோகிகளாகவும் நயவஞ்சகர்களாகவும் சித்தரிக்கின்றன. இன நல்லுறவுக்கு எதிரான இவ்வித கருத்துக்களை அரசு தடுத்தாக வேண்டும்.



நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# வன்முறைகள் நிகழ்ந்தால் உடன் கட்டுப்படுத்துவேன்

## முஸ்லிம் தூதுக்குழுவிடம் ஊவா முதல்வர்

(பதுளை நிருபர் வாஹிட் சூத்தூஸ்)

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள இன, மத, நல்லிணக்க செயற்பாட்டுக்கு எதிரான கடும் போக் காளர்களின் கள நிலவரத்தைவிட்டு பதுளை மாவட்ட மக்களினதும் மதஸ்த ல, வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட கேந்திர ஸ்தானங்களின் பாது காப்புக்கு தாம் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டிருப்பதாகவும், இது சம்பந்தமாக உரிய உயர் அதிகாரிகளுக்கு தாம் பணிப்புரை விடுப்பதாகவும், இவ் விடயம் சம்பந்தமாக ஏதாவது நடந்தால் எந்த நேரமும் தன்னை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

பதுளை மாவட்ட முஸ்லிம் மக்கள் சார்பில் தன்னை சந்தித்து நாட்டு நிலவ ரம் தொடர்பில் வேண்டுகோள் விடுத்த பதுளை நகர் முஸ்லிம் தூதக்குழுவின ரிடமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதுளை ஸ்ரீ. ல. சுதந்திக்கட்சியின் முஸ் லிம் கிளையின் தலைவரும், முன்னாள் பதுளை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவருமான கம் பளை ஐவாட் ரபீக் ஏற்பாட்டில், பதுளை நகர, சமய, சமூக, அரசியல், வர்த்தக, கல்வியாளர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் அடங்கிய முஸ்லிம் தூதுக்குழுவினர் ஊவா முதல்வர் சாமரவை அவரது உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் (23) செவ் வாய் மாலை 5.00 மணியளவில் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தினர். பாது காப்புக் கருதி, விசேட கோரிக்கையையும் விடுத்தனர். சுமார் ஒரு மணி நேரம் இந்த சந்திப்பு நிகழ்வு நடந்தது.

முன்னர் பதுளை, பசறை, பண்டாரவ ளை, வெலிமடை, மஹியங்கனை பிர தேசங்களில் இடம்பெற்ற பள்ளிவாசல், பாடசாலை, வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் மற்றும் எதிர்ப்பு சம்பவங்கள் குறித்தும் முதல்வருக்கு சுட்டிக் காட்டப் பட்டது.

இதன்போது உடனடியாக, நேரடியாக, மாகாண டி. ஐ. ஜி. எஸ். எஸ். பி. எஸ்.பி ஆகியோரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதுகாப்பு ஏற்பாடு களை மேற்கொண்டிருந்தார்.




மத்துகம, அகலவத்தை பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கடந்த சனிக்கிழமை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து தேவைகளைக் கேட்டறிந்தார். போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள பலந்தாவ கிராமத்தில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் பத்துரலியவில் வைத்து நிவாரணப் பணியாளர்களிடம் நிதியுதவி வழங்கி வைத்தார். அத்துடன் லக் ஹந்துர விகாராதிபதியிடமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவியை வழங்கினார். அத்துடன் உலர் உணவுப்பொருட்களையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெருமவும் அந்த பிரதேசத்திற்கு வந்து மக்களின் தேவைகளை கவனித்தார்.

# அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை

தென்மாகாணத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து கல்வி வல யங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கும் இன்றும், நாளையும் விடுமுறை வழங்கப் படுவதாக தென்மாகாண கல்வி அமைச்சு தெரிவித்தது.

நிலவும் சீரற்ற வானிலையால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக மாகாண கல்வி அமைச்சர் சந்திம ராசபுத்ர கூறி யுள்ளார்.

மழையுடனான வானிலை இல்லாத போதிலும், சில பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதுடன் மண்சரிவு அபாயம் தொடர்ந்தும் நீடிப்பதால், பாடசாலைக ளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் நிவித்திகல கல்வி வலயங்களுக்குட்பட்ட அனைத்து பாடசா லைகளுக்கும் இன்று விடுமுறை வழங் கப்படுவதாக சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சு தெரிவித்தது.

மேலும் தெஹியோவிட்ட மற்றும் இறக்குவான பகுதிகளில் தற்காலிக முகாம்களாக இயங்கும் அனைத்து பாட சாலைகளும் இன்று விடுமுறை வழங்கப் படுவதாகவும் மாகாண கல்வி அமைச்சர் பானு மனுப்பிரய குறிப்பிட்டுள்ளார்.

## தொழிலதிபர் ஹபீப் முஹம்மதின் ஜனாஸாவில் பெருந்திரளானோர்



விளை யாட்டுத் துறை பிரதி அமைச்சர் எச்.எம். எம்.ஹரி ஸின் தந்தையான தொழிலதி பர் ஹபீப் முஹம்மத் வெள்ளியன்று கொழும்பில் காலமானார்.

இவரது ஜனாஸா சனியன்று கல் முனையில் பெருந்திரளான மக்களது பிரசன்னதுடன் நடைபெற்றது.

கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளி வாசலின் நீண்டகாலம் தலைவராகப் பணிபுரிந்த இவர் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எம்.எம்.அஷ்ரப்புடன் நெருங்கிச் செயற்பட்டவராவார்.

## பெயர்மாற்றம்

கீதாவாச, பொத்துவில் 03ஐ சேர்ந்த குடாவிதானக உப்புல் சந்திரசிறி ஆகிய நான் உப்புல் சந்திரசிறி எனும் பெயரை குடாவிதானக உப்புல் சந்திரசிறி என இன்று முதல் மாற்றிக் கொண்டு இனி வரும் காலங்களில் சகல ஆவணங் களிலும் புதிய பெயரையே பயன்ப டுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- குடாவிதானக உப்புல் சந்திரசிறி

## பியகமவில் 13159 பேர் வெள்ளத்தால் பாதிப்பு

(மல்வானை ஹனைபி)

கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கடும்மழை காரணமாக பியகம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இதுவரை 2898 குடும்பங்களைச் சே ர்ந்த 13159 பேர் பாதிக்கப்பட்டுள்ளன ர்.

இப்பிரதேச செயலாளர் பிரிவின் உள்ள 23 கிராம சேவகர் பிரிவு கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு இக்குடும்பங்கள் இதே கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களா வர். இதேவேளை மல்மேடொல்லு வீடொன்றின் மீது இடிந்து வீழ்ந்ததால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மக ளும் உயிரிழந்துள்ள தோடு இன்னொரு வீடு முழுமையா கவும் மேலும் 26 வீடுகள் பகுதிகளா கவும் சேதமடைந் துள்ளன. பியகம ஐ.தே.கட்சி பிரதான அமைப்பாளர் பாது காப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, பியகம ஸ்ரீ லங்கா சு.கட்சி பிரதான அமைப்பாளர் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார பிரதி அமைச்சர் துலிப் விஜேசே கர, மேல் மாகாண சபை உறுப்பினர் களான குணசிரி ஜயனாத், பிரசன்ன சம்பத், அசோக ரன்வல, பிய கம பிரதேச சபை முன்னாள் தலைவர் ஆனந்த கனேபொல ஆகியோர் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலும் பியகம பிரதேச செயலகத்தி னால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு சமைத்த உணவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.


## கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

### கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு குளிரூட்டி வசதிகளையுடைய லொறிகளை வாடகைக்கு அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுகொள்ளல்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் விற்பனை செய்யப்படும் குளிரூட்டப்பட்ட உணவு பொருட்களை யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் போக்குவரத்து செய்வதற்காக குளிரூட்டி வசதிகளுடனான இரு லொறிகள் (Frezer Truck) தேவைப்படுகின்றது.

குறிப்பிட்ட வாகனங்கள் பின்வரும் வசதிகளைக் கொண்ட வசதிகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

1. 14 1/2 அடி நீளமானதாக இருக்கவேண்டும்.
2. 14 C (எதிர்மறை) மற்றும் +5Cக்கு இடையிலான குளிரூட்டல் வசதி இருக்க வேண்டும்.
3. உள்ளக வளாகத்தின் அளவு தேவைக்கேற்ப மாற்றக்கூடியதாக இருக்கக் கூடிய தாக இருக்கவேண்டும்.

சகல விபரங்களும் உள்ளடங்கிய விண்ணப்படிவத்தை கூ.மொ.வி. பிரதான அலுவலகத்தில் 7 ஆம் மாடியிலுள்ள சேவைப்பிரிவிலிருந்து பெற்றுகொள்ளலாம். விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறதித்தினம் 2017.06.02 ஆம் திகதியாகும்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**
**27,வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.**

## கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

### கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான மின்சார மையப்பலகையில் pannel Board திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக விலை மனுக்கோரல்

கொழும்பு-02, வொக்சோல் வீதியில் அமைந்துள்ள கூ.மொ. வி. பிரதான அலுவலகத்தின் மின்சார திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு கேள்வி விலை மனுக்கோரப்படுகின்றது.

குறிப்பிட்ட மையப்பலகையை 2016.05.29 ஆம் திகதியிலிருந்து கூ.மொ.வி. பிரதான அலுவலக சுற்றாடலில் பரிசீலித்துப்பார்க்கலாம். சகல விபரங்களும் அடங்கிய விண்ணப்படிவத்தினை மீளச் செலுத்தப்படாத 2500 ரூபா பணத்தை கூ.மொ.வி. காசாளரிடம் செலுத்தியபின் 2017.06.12 ஆம் திகதி 2.00 மணிக்கு முன் கூ.மொ.வி. பிரதான அலுவலகத்தில் ஏழாவது மாடியில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். டெண்டர் பத்திரங்கள் அந்த நேரத்தில் திறக்கப்படும்.

**தலைவர்**
**கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்**
**27,வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.**

LANKA SATHOSA லங்கா சதொச

## தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

**தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்**

இலங்கை அரசிற்கு உரித்தான லங்கா சதொச லிமிட் நிறுவனமானது நாட்டின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பில் அடங்குவதுடன் நாடுமுழுவதும் 500 நிகும் மேற்பட்ட கிளைகளை கொண்டுள்ளதுடன் வரையறுக்கப்பட்ட விற்பனை விநியோகஸ்தர்கள் 8,000 ஐ ஸ்தாபிப்பதற்கான வேலைத்திட்டமானது தற்போது நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. லங்கா சதொச லிமிடட் மூலம் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களும் கணனி மயப்படுத்தப்படுவதுடன் ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **கணக்காளர்** வெற்றிடத்திற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

### கணக்காளர் (05 வெற்றிடங்கள் - ஒப்பந்த அடிப்படையில்)

**நோக்கங்கள்**

கடன்களை சேகரித்தல் / சேகரித்தல் முகாமைத்துவம்
வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள்
விவரபட்டியல் மற்றும் வியாபார கணக்கியல்
விற்பனை வரி முகாமைத்துவம் (வட் வரி (VAT), தேசிய ரீதியில் மேம்படுத்தலுக்கான வரி (NBT), அபிவிருத்தி சேவை கட்டணம் (ESC)
நிதி அறிக்கை

**தொழில் குறிக்கோள்கள்**

- கணனி மயப்படுத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குதல;
- இலங்கையின் கணக்கியல் தரத்தினை செயற்படுத்தல்
- கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட உப பிரிவுகளை வரவை நோக்கி மேம்படுத்தல்
- ஆண்டறிக்கைக்கான செயற்பாடுகளை சரியாக நிறைவு செய்தல்
- புதிய அமைப்புகளுக்கு ஒத்துழைத்தல் / செயற்படுதல்

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள், முன் அனுபவம் மற்றும் திறமைகள்**

- இலங்கை பட்டய பரீட்சையில் இறுதி தேர்வில் சித்தி பெற்றிருத்தல்.
- கணக்காய்வு / விற்பனை துறையில் 03 வருட முன்அனுபவத்துடன் சிறந்த செயற்திறன் மிக்கவராக இருத்தல்
- முன்னாய்வு மற்றும் கணக்கியல் தேவைகளுக்கேற்ப வருடாந்த கணக்காய்வு அறிக்கைகளை தயாரிக்க இயலுமை.
- நடைமுறை முகாமைத்துவ அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் முன்னாய்வு செய்தல்.
- ஆங்கில மொழியில் பேசும் மற்றும் எழுதும் திறமையுடன் சுயமாக வேலை செய்யும் திறன்
- திறமையான தொடர்பாடல், கொடுக்கல் வாங்கல்கள், அறிக்கைகள் தயாரித்தல், வியாபார
- நடைமுறை மற்றும் கணனி அறிவு முக்கியமாகும்.
- வணிக வளங்களை முகாமைத்தும் செய்தல் தொடர்பான அனுபவங்கள் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.

**கொடுப்பனவுகள்**

- மாதாந்த கொடுப்பனவு ரூபா.55,000/-
- மாதாந்த சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்காக 10% மற்றும் 12% முறை ஊழியர் மற்றும் தொழில் வழங்குனர் மூலம் வழங்கப்படுவதுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு 3% உம் செலுத்தப்படும்.

**பொது நிபந்தனைகள்**

- 35 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும்.
- உடனடியாக ஆட்சேர்ப்புகள் இடம்பெறும்.

**நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.**
**(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)**

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட லங்கா சதொச,**
சதொச செயலாளர் காரியாலயம் இல. 27, 05ஆம் மாடி வொர்க்ஷோல் வீதி, கொழும்பு 02

# ஸஹரும், இப்தாரும்



எனது சமுதாயத்தினர் ஸஹர் செய்வதை பிற்படுத்தும் காலம் வரையும், நோன்பு திறப்பதை அவசரப்படுத்தும் காலம் வரையும் நன்மையில் இருக்கின்றனர்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முத்தபகுன் அலைஹி).

நிச்சயமாக எனது அடியார்களில் எனது நேசத்திற்குரியவர்கள் நோன்பு திறப்பதை அவசரப்படுத்துபவர்களாவர்'' என அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி).

நோன்பு திறந்தவுடன் ஒருவர் ஓத வேண்டிய பிரார்த்தனை: ''தஹபல் லமஉ வப்தல்லதில் உரூகு வஸபதல் அஜ்ரு இன்ஷா அல்லாஹ்''

பொருள்: நரம்புகள் நனைந்து விட்டன, தாகம் தீர்ந்து விட்டது, கூலி அல்லாஹ்வின் நாட்டத்தின் படி உறுதியாகி விட்டது இந்த பிரார்த்தனை உறுதியான அறிவிப்பாளர் தொடருடன் பதிவாகி இருக்கிறது. அபூதாவூதில் பதிவாகி இருக்கும் இந்த ஹதீஸ் ஆதாரப் பூர்வமானது, வேறு சில பிரபலமான பிரார்த்தனைகள் ஓதப்பட்டு வந்தாலும் அவைகள் பலவீனமான ஹதீஸ்களாகும்.

எவர் ஒருவரை நோன்பு திறக்க வைப்பாரோ அவருக்கு அந்த நோன்பாளிக்குக் கிடைக்கும் கூலியைப் போன்றே வழங்கப்படும். அவரது கூலியில் எந்த ஒன்றும் குறைக்கப்பட மாட்டாது'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், திர்மிதி).

# சிறப்புகள் பொதிந்த ரமழான்

''ரமழான் மாதம் எத்தகையதென்றால் மனிதர்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய, சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டும், அல் குர்ஆன் அருளப் பெற்றது. உங்களில் எவர் அம்மாதத்தை அடைவாரோ அவர் அம்மாதத்தில் நோன்பு நோற்கட்டும்'' (அல்பகரா 2: 185).

ரமழானின் ஒவ்வொரு இரவிலும் ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களை சந்தித்து அல்குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள்'' (புகாரி)

இச்செய்திகள் அல்குர்ஆனுக்கும் ரமழானுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை தெளிவுபடுத்துகிறது. அல்குர்ஆனுடனான தொடர்பை குறைத்துக்கொண்ட அதிகமான முஸ்லிம்கள் இச்சந்தர்ப்பத்திலிருந்தாவது அல் குர்ஆனை படிப்பதன் மூலம், அதனை ஆராய்வதன் மூலம், அதன் வழி நடப்பதன் மூலம், வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் அதை தீர்வாக ஆக்கிக்கொள்வதன் மூலம் அதன் பக்கம் நெருக்கத்தை அதிகப்படுத்துக் கொள்ள வேண்டும்.

''ரமழான் மாதம் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படும், நரகத்தின் வாசல்கள் மூடப்படும், ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்'' என நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முத்தபகுன் அலைஹி)

''ரமழானுடைய ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நரகத்திற்குரியவர்கள் விடுதலைச் செய்யப்படுகின்றனர், இன்னும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பிரார்த்தனை இருக்கிறது'' என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

''ஐந்து வேளைத் தொழுகை, ஒரு ஜும்ஆவிலிருந்து மற்றொரு ஜும்ஆ, ஒரு ரமழானிலிருந்து மற்றொரு ரமழான். அவைகளுக்கு மத்தியில் நிகழ்ந்த பாவங்களுக்கு பரிகாரமாகும். பெரும் பாவங்களைத் தவிர'' என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ரமழான் மாதத்தில் லைலதுல் கத்ர் என்ற ஒரு இரவு இருக்கிறது, அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும்.

# நோன்பாளிக்கான உபதேசங்கள்



(தொகுப்பு- இபாதுல்லாஹ் இஸ்ஸத்)

ரமழானில் அல்லாஹ்வுக்காக, அவனது கூலியை நாடி, உள்ளச்சத்துடன் நோன்பு வைத்தவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன: அவ்விரவுகளில் தொழுதவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அம்மாதத்தின் சிறப்பான லைலத்துல் கத்ர் இரவை பெற்றவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என நபி(ஸல்) நவின்றார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) (நூல்:புகாரி, முஸ்லிம்).

நோன்பாளி செய்யக்கூடாதவை

எவன் பொய்யான சொற்களையும், தீய நடத்தையையும், விடவில்லையோ அவன் உண்ணாமல் பருகாமலிருப்பதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் இல்லை. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) புகாரி

நீங்கள் நோன்பு வைத்திருக்கையில் தீய பேச்சுக்கள் பேசுவதோ கூச்சலிடுவதோ கூடாது. அவனை யாரேனும் ஏசினால், அல்லது அவனுடன் சண்டையிட முற்பட்டால் நான் நோன்பாளி என்று கூறிவிடவும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) (புகாரி, முஸ்லிம்)

நோன்பின் தற்காலிக சலுகைகள்

நீங்கள் பயணத்திலோ நோய்வாய்ப் பட்டவர்களாகவோ இருந்தால் வேறொரு நாளில் அதனை நோற்கவேண்டும். (அல்குர்ஆன்: 2:185)

எங்களுக்கு மாதவிடாய் ஏற்படுகையில் (விடுபட்ட) நோன்பை வேறு நாட்களில் நோற்கும்படியும், அதே காலத்தில் விடுபட்ட தொழுகையை வேறு நாட்களில் நிறைவேற்ற கூடாது என்றும் உத்திரவிடப்பட்டிருந்தது. அறிவிப்பவர்: அன்னை ஆயிஷா (ரழி) (நூல்:முஸ்லிம்)

அல்லாஹ்வின் தூதரே! பயணத்தில் இருக்கும்போது நோன்பு நோற்க எனக்கு சக்தி உள்ளது. அப்போது நோன்பு நோற்பது என்மீது குற்றமாகுமா? என்று நான் கேட்டபோது, நபி(ஸல்) அவர்கள் இது அல்லாஹ் வழங்கிய சலுகையாகும். எவன் இந்தச் சலுகையைப் பயன்படுத்துகின்றானோ, அது நல்லது தான். நோன்பு நோற்க எவரேனும் விரும்பினால் அதில் குற்றம் ஏதும் இல்லை. அறிவிப்பவர்: ஹம்ஸா இப்னு அம்ரு(ரழி) நூல்:முஸ்லிம்

நேன்பாளிக்கு அனுமதிக்கப்பட்டவை

நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருக்கும் போது பலமுறை பல் துலக்கிக் கொண்டிருக்க நான் கண்டுள்ளேன். அறிவிப்பவர்: ஆமிர் இப்னு ரபிஆ (ரழி) நூல்:அபூதாவூது, திர்மிதீ

நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்த போது தாகத்தின் காரணமாகவோ, அல்லது கடும் வெப்பத்தினாலோ தங்கள் தலைமீது தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்ததை அர்ஜ் என்ற இடத்தில் வைத்து நான் பார்த்தேன். அறிவிப்பவர்:மாலிக் (ரழி) (நூல்:அபூதாவூது)

நோன்பு நோற்றிருப்பவர் தான் நோன்பாளி என்பதை மறந்த நிலையில் உண்ணவோ பருகவோ செய்து விட்டால் (நோன்பு முறிந்து விட்டது என்று எண்ண வேண்டாம்) மாறாக அந்த நோன்பையே முழுமைப்படுத்தட்டும், ஏனெனில் அவனை அல்லாஹ் உண்ணவும், பருகவும் செய்திருக்கின்றான். நபி (ஸல்) அறிவிப்பவர்: அபூஹுரைரா. (நூல்:புகாரி, முஸ்லிம்)

ஸஹர் செய்தல்

நீங்கள் ஸஹர் செய்யுங்கள்: ஏனெனில் அதில்(அபிவிருத்தி) பரகத் உண்டு. நபி(ஸல்) அறிவிப்பவர்: அனஸ் (ரழி). (புகாரி, முஸ்லிம்)

ஒரு ரமழானில் ஸஹர் உண்ண என்னை நபி (ஸல்) அவர்கள் அழைத்தார். பரகத் நிறைந்த உணவு உண்ண வாரும் என்று அப்போது கூறினார். (நூல்: அபூதாவுது, நஸ்யீ)

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஸஹர் உணவு உண்டோம்: அதன் பிறகு பஜ்ரு தொழுகைக்கு நின்றோம். ஸஹர் உணவு உண்டதற்கும் பஜ்ரு தொழுகைக்கும் இடையில் எவ்வளவு நேரமிருந்தது என நான் வினவினேன். அதற்கு அவர் திருக்குர்ஆனின் ஐம்பது வசனங்கள் ஓதுகின்ற அளவு இடைவெளி இருந்தது என விடை பகர்ந்தார்கள். அறிவிப்பவர்: ஜைது பின் தாபித் (ரழி). (நூல்: புகாரீ, முஸ்லிம்)நோன்பு திறப்பது அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். நோன்பு திறப்பதில் காலதாமதம் செய்யாதவர்கள் தான் எனக்கு விருப்பமான அடியார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி). (நூல்: அபூதாவூத், இப்னுமாஜா) நீங்கள் நோன்பு திறக்கும்போது பேரீத்தம் பழத்தின் மூலம் நோன்பு திறவுங்கள்! அது கிடைக்காவிட்டால் தண்ணீர் மூலம் நோன்பு திறவுங்கள். என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரழி) (நூல்:திர்மிதீ, அபூதாவூது)





ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதைத் தொடர்ந்து டமஸ்கஸ் நுழைவாயிலில் பலஸ்தீனர்கள் ஒன்றிணைந்து ஆரவாரங்களில் ஈடுபடுவதையும், முதல் நோன்பை நோற்ற வியாபாரிகள் குடும்பத்துடன் கடையொன்றில் மஃரிப் அதானுக்காக காத்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# மறுமலர்ச்சி தரும் ரமழான்

மௌலவி எம்.எஸ். முஹம்மது ரஃபீக்

ரமழானின் மேன்மையையும், சிறப்பையும் அறிந்தவர்களெல்லாம் காலம் முழுதும் ரமழானாக இருக்கக் கூடாதா? என ஏங்கித் தவித்தார்கள். ஸஹாபாக்களும், இறை நேசர்களும் ரமழானில் நோன்பு வைப்பதிலும் திருக்குர்ஆன் ஓதுவதிலும் இரவெல்லாம் நின்று வணங்குவதிலும் அவர்களுக்கிருந்த பேரானந்தமும், பேராசையும் சொல்லில் முடிக்க முடியாதவையாக இருந்தன.

ரமழான் மனிதனுடைய செயல்பாடுகளையும், அவனுடைய நித்திய வழக்க முறைகளையும் அல்லாஹ்வின் அன்பிற்காக மாற்றி அமைக்கிறது. தினமும் நேரம் தவறாமல் மிகச்சரியாக உண்டு பருகியவன், சாப்பிட்டு மகிழ்ந்தவன்; மற்ற காலங்களில் மறந்தும் சாப்பிடாத, பருகாத ஒரு நேரத்தில் உண்ணுகிறான் பருகுகிறான் என்றால் யாருக்காக - அல்லாஹ்வின் கட்டளைக்காகத் தானே...!

ஸஹர் நேரம் என்ற அந்த அதிகாலை வைகறைப் பொழுது என்பது மனிதரெல்லாம் ஆழ்ந்து உறங்குகின்ற அதி அற்புத நேரம். இரவெல்லாம் உறங்காதவர் கூட தன்னை மறந்து மறந்தே உறங்கிப் போகின்ற நேரம். உலகின் எந்த மூலையில் வாழுகின்ற மனிதனும் சாப்பிடாத - சாப்பிடப் பிடிக்காத - மனம் ஒப்பாத ஒரு நேரத்தில் அல்லாஹுவுக்காக - அல்லாஹ்வின் ரஸூலுக்காக - அவர்களின் கட்டளைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்தவனாக சாப்பிடுகிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். ''அல்லாஹுத ஆலாவும், அவனது மலக்குகளும், ஸஹர் சாப்பிடுவோரின் மீது அருள் புரிகின்றனர்''. (அறிவிப்பாளர்: ஹள்றத் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நூல்: அத்தர்கீப்)

ஸஹர் நேர உணவிற்கு அல்லாஹ் தரும் அதி அற்புத ஆற்றல் இது. அன்டைம் எனச் சொல்லப்படும் காலம் கடந்த ஒரு நேரத்தில் சாப்பிடும் உணவிற்கு செரிமானத்தையும் தந்து - குடலின் இயக்கத்தை சீராக்கி நோன்பாளிக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் ஆக்குகிறான் அல்லாஹ்.

பசி வந்தால் பத்தும் பறந்து விடும், பசித்தால் புலியும் புல்லை தின்னும் எனச் சொல்லுவார்கள். ஆனால் நோன்பு வைத்திருக்கும் பசியாளிகள் கொஞ்சமும் நிதானம் இழக்காமல் கட்டுப்பாட்டுடன் செயல்படுகிறார்கள்.

பசி நேரத்தில் மனிதன் எதைக் கொடுத்தாலும் உண்டு விடுவது பழக்கம். நல்லதா? கெட்டதா? ஹலாலா? ஹராமா? ருசியானதா? இல்லையா? என்றெல்லாம் பார்ப்பது கிடையாது. கிடைத்ததும் விழுங்கத்தான் எத்தனிப்பான். அதே சமயம் ஒரு நோன்பாளி நோன்பின் மயக்கம், தாகம் மேலிட்ட போதும் கமகமவென மணக்கும் மிகருசியான அறுசுவை உணவுகளும், மனம் லயிக்கின்ற விருப்பமான பதார்த்தங்களும் பரப்பிவைக்கப்பட்ட போதிலும் நாவும் கரமும் சுவைக்கத் துடிதுடித்த போதிலும், மனதை ஒருநிலைப்படுத்தி நஃப்ஸை அடக்கி அல்லாஹ் தடுத்து விட்ட நேரத்தில் ஹலாலான உணவுகளைக் கூட ஹராமாக்கிக் கொள்கிறான். பசி இல்லாத நேரத்தில் சாப்பிட வைத்து பசிக்கின்ற நேரத்தில் சாப்பிட தடை விதிக்கும் இந்த விந்தையான கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து அல்லாஹ்வை மனமுவந்து ஏற்றுக் கொள்கின்ற நிறைவான தன்மையை உலகில் அல்லாஹ்வைத் தவிர யாரால் ஏற்படுத்திட முடியும்? எனவே தான் நோன்பிற்குரிய கூலியை தானே நேரடியாகத் தருவதாகவும், தானே கூலியாக ஆகிவிடுவதாகவும், அல்லாஹ் வாக்களிக்கின்றான். ஆத்மார்த்த ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் மனிதனை மாற்றும் சக்தி நோன்பிற்கு இருக்கிறது. மனிதனின் மனோ இச்சைகளை முறியடிக்கும் சக்தி இறையச்சத்தின் அடிப்படையில் நோற்கும் நோன்பைத் தவிர வேறெதிலும் இருக்க முடியாது. பசியின் கொடுமையால் நல்லவர்கள் கூட திருட முனைவார்கள். நோன்பு என்ற பெயரிலுள்ள பசியாளியான திருடனைக் கூட நல்லவனாக மாற்றும் சக்தி இறையச்சமிக்க நோன்பிற்கு இருக்கிறது.

''ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் ஓடுமிடமெல்லாம் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கின்றான். அவனுடைய வழிகளைப் பசித்திருப்பதின் மூலம் தடை செய்யுங்கள்'' என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:-

'நோன்பு ஒரு கேடயம் அதனை உடைக்காமலிருக்கும் வரை'' (அறிவிப்பாளர் : ஹள்ரத் உபைதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்)

கேடயத்தின் மூலம் தன்னை தற்காத்துக் கொள்வது போல நோன்பின் மூலம் மனிதன் ஷைத்தானிய உணர்வுகளிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்கிறான். எனவே தான் நோன்பின் ஆழிய உணர்வுகளைப் பெற்றவர்களெல்லாம் காலமெல்லாம் ரமழானாக இருந்திருக்க வேண்டாமா? என பேராவல் கொண்டார்கள்.

ஆனால் நாம் காலமெல்லாம் ரமழான் வராமல் இருந்திருக்கக் கூடாதா? என நினைக்கிறோம். நோன்பை ஒரு கடினமான செயலாக நினைத்துக் கொண்டதான் விளைவு இது. நோன்பு வைப்பது என்றால், ஸஹருக்கு அது செய்ய வேண்டுமே இது செய்ய வேண்டுமே செலவுகள் அதிகமாகுமே, நோன்பு திறக்க பல பதார்த்தங்கள் செய்ய வேண்டுமே என, ஒரு பக்கம் செலவுகளையும் சிரமங்களையும் எண்ணிப் பார்க்கின்றோம்.

மற்றொரு பக்கம் ரமழான் வந்தால் வியாபாரம், விவசாயம், தொழில் தடைபடுமே என்றெல்லாம் தவறான கற்பனைகளை உண்டாக்கிக் கொண்டு அலைகின்றோம். தேவையில்லாத பயணங்களை காரணம் சொல்லிக் கொண்டும், நோய்களை காரணம் காட்டிக் கொண்டும் தட்டிக் கழிக்க முயற்சிக்கின்றோம். ஸஹாபாக்கள் நோன்பு வைத்துக் கொண்டே வியாபாரம் செய்யவில்லையா? உழைக்கவில்லையா? சம்பாதிக்கவில்லையா? என்பதனை சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். ரமழானுடைய நோன்புகளை காரணங்கள் கூறி தட்டிக் கழிப்போமேயானால் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து ஒருக்காலும் தப்பமுடியாது. எந்த மனிதன் தகுந்த காரணமின்றி ரமழான் மாதத்தில் பகிரங்கமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாரோ அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என மார்க்க சட்ட வித்பன்னர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.



ரமழானின் சிறப்புக்களும், மேன்மைகளும், அதற்கு அல்லாஹுவால் அளிக்கப்படும் வெகுமதிகளும் எண்ணிலடங்காதவை. பர்ழான கடமைகளுக்கு எழுபது மடங்கு நன்மைகள் அதிகரிக்கும் போது, மற்ற வணக்கங்களுக்கு அதிகரிக்கும் நன்மையை அல்லாஹ்வே அறிவான்.

நோன்பு நோற்பதின் மூலம் உங்களில் ஓர் உயர்வான மாற்றத்தை ஏற்படுத்துங்கள். அது உங்களை ஆன்மீக ரீதியான படித்தரங்களில் உயர்த்துவதாக இருக்கட்டும்.

## உலகச் செய்திகள்

# கனடாவில் ஒரு நாள் பிரதமராக 5 வயது சிறுமி பெல்லா மூஸ்



கனடாவில் ஒருநாள் பிரதமராவதற்காக குழந்தைகளுக்கு கட்டுரை போட்டி நடந்தது. அதில் பெல்லா மூஸ் என்ற 5 வயது சிறுமி வெற்றி பெற்றாள்.

அதை தொடர்ந்து அவள் ஒட்டாவாவில் உள்ள பிரதமர் ஜஸ்டின் டிருடியோ அலுவலகம் வந்தாள்.

அவளை பிரதமர் வரவேற்று அழைத்து சென்று இருக்கையில் அமர வைத்தார். அங்கு அவள் ஒரு நாள் பிரதமர் ஆனாள்.

அதை தொடர்ந்து அவள்தான் ஒரு கோட்டை கட்ட வேண்டும் என உத்தரவிட்டாள்.

அதை ஏற்றுக் கொண்ட ஜஸ்டின் டிருடியோ தலையணைகள், நாற்காலிகள், மேஜை மற்றும் பலவித ஓவியங்களுடன் கூடிய போர்வையால் கோட்டை கட்டி ஒரு நாள் பிரதமரான சிறுமி பெல்லா மூசிடம் வழங்கினார். அதைப் பார்த்து அவள் மகிழ்ச்சி அடைந்தாள்.

# மதீனா பஸ் அனர்த்தத்தில் 6 பேர் பலி, 81 பேர் கடும் காயம்

மதீனா- காஸிம் அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட பஸ் விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 81 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சியாத் தெற்கு பிராந்தியத்திற்கு பயணித்துக்கொண்டிருக்கும்போது சித்ரத் சுப்ரா பலம் அருகில் ஜெபல் தாமிஆ என்ற இடத்திலேயே 5 பஸ் வண்டிகள் மோதுண்டுள்ளது.

மேற்படி பஸ் விபத்தில் உயிரிழந்த, பாதிக்கப்பட்டவர்களுள் பங்களாதேஷ் மற்றும் இந்திய பிரஜைகளே அதிகமாக இருப்பதாக காஸிம் சிவில் பாதுகாப்பு துறையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான 5 பஸ் வண்டிகளிலும் 200 பயணிகள் இருந்துள்ளனர். 16 பேரின் நிலைமை கவலைக்கிடம் என்றும் 65 பேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீரற்ற காலநிலை காரணமாகவே மேற்படி பஸ் விபத்து ஏற்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்பு படையினர் தெரிவிக்கின்றனர்.



# பசு, எருமை, ஒட்டக இறைச்சி விற்பதோ வாங்குவதோ தடை

### காங்கிரஸ் உட்பட அரசியல் கட்சிகள் எதிர்ப்பு போராட்டம்



(திருச்சி சாஹுல் ஹமீது)

பசு, எருமை, அதன் கன்றுக் குட்டிகள், ஒட்டகம் போன்றவற்றை இறைச்சிக்காக சந்தைகளில் விற்கவோ வாங்கவோ கூடாது என மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் தடைவிதித்துள்ளது. இந்த உத்தரவுக்கு நாடு முழுவதும் அரசியல் கட்சிகளும், இறைச்சி பிரியர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ரமழான் தொடங்கும் இந்த நேரத்தில் இந்த தடை உத்தரவு அறிவித்திருப்பதற்கு முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மத்திய அரசின் தடை உத்தரவை எதிர்த்து காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் போராட்டத்தில் குதித்ததுள்ளது. மாட்டிறைச்சி சமைத்து சாப்பிடும் போராட்டத்தையும் நடத்திவருகின்றனர்.

கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் கேரள மாநில அரசும், காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் கர்நாடகம், மேகாலயா, மிசோராம் மாநில அரசுகளும் மத்திய அரசின் உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. தடையை அமுல்படுத்த மாட்டோம் என்று முதலமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த சனியன்று, ஒரே நாளில் 210 இடங்களில் மாட்டுக்கறி திருவிழா நடத்தி பொதுமக்களுக்கு விருந்து அளித்து அவர்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். தொடர்ந்தும் இன்றும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தது. எதிர்ப்பு வலுத்து வருவதால் மத்திய அரசின் தடை உத்தரவை கேரளாவில் அமல்படுத்தப் போவதில்லை என அம்மாநில முதலமைச்சர் பினராய் விஜயன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

# அமெரிக்க பொருளாதாரத்துக்கு புதிய நிர்வாக அடித்தளம்

### ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்காவின் உன்னதத்தை எட்டவும், நாட்டின் எதிர்கால பொருளாதார வளத்துக்காகவும், தனது நிர்வாகம் புதிய அடித்தளத்தை அமைத்து வருவதாகவும், அதற்கு தனது முதல் வரவு செலவுத் திட்டம் பெரிதும் உதவும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வாராந்தம் வானொலி மற்றும் இணையதளம் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அவரது அரசின் முதல் பட்ஜெட் குறித்து பேசியபோது, இந்த பட்ஜெட் புதிய அமெரிக்காவுக்கான அடித்தளமாக அமையும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அமெரிக்காவின் உன்னதத்தை எட்டவும், நாட்டின் எதிர்கால பொருளாதார வளத்துக்காகவும், எனது நிர்வாகம் புதிய அடித்தளத்தை அமைத்து வருகிறது. அந்தவகையில் எனது நிர்வாகம் தாக்கல் செய்யும் முதல் பட்ஜெட், அமெரிக்க தொழிலாளர்களுக்கு லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளுக்கான பாதையை உருவாக்குவதுடன், பொருளாதார தேக்க நிலையையும் மாற்றும் என்றார்.

தனது பட்ஜெட்டில் சமூக பாதுகாப்பு மற்றும் மருத்துவ திட்டங்களுக்கு நிதி குறைக்கப்படாது என்று கூறிய டிரம்ப், நமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மக்கள் வீடுகளில் மேற்கொள்வது போல முன்னுரிமைகளை அமைத்தல், தேவையற்றதை குறைத்தல், புதிய வாய்ப்புகளை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். கவனமும், பாதுகாப்பும் இல்லாமல் பொருளாதார வளர்ச்சி சாத்தியமாகாது என்றும் டிரம்ப் கூறினார்.

# ஆசிரியரும், சமூகமும்



ஆசிரிய சேவை மகத்தானது, மனிதநேயம் மிக்கது. அறிவைக் கொடுத்து, ஆளுமையை வளர்த்து, மனப்பாங்கிலே மாற்றத்தை ஏற்படுத்தி, மனிதனுக்கும் அவனது வாழ்க்கைக்கும் தன்னிறைவைப் பெற்றுக் கொடுப்பதில் ஆசிரியரின் சேவை முதன்மை பெறுகின்றது.சிலை வடிக்கும் சிற்பியால் அதற்கு உயிர் கொடுக்க முடியாது.எனினும், ஆசிரியர் வடிவமைக்கும் அல்லது வார்த்தெடுக்கும் மனிதனுக்கு உயிரோட்டமுள்ள அறிவைக் கொடுக்க ஆசிரியரால் முடிகின்றது.மனிதனின் இயக்கத்தில் ஆசிரியரின்- அவர் சார்ந்திருக்கின்ற சூழலின் செல்வாக்கு பிரதிபலிப்பதை எப்போதும் காணலாம். இதனால்தான் பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் மாணவன் வெறும் களிமண் உருண்டையாக உருவகித்துக் காட்டப்படுகின்றான்.அதனை வடிவமைத்து சமூகத்துக்கு ஒப்படைப்பது ஆசிரியரின் பணியாக உள்ளது.அதனால் தான் பாடசாலைகள் திறக்கப்படும் போது சிறைச்சாலைகள் மூடப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

பெரும்பாலும் ஆசிரியரின் பணி பாடசாலையுடன் நின்று விடுவதில்லை. சமூகத்தில் மனிதனை உயர்த்திவிடும் ஏணியாக அல்லது அவனைக் கரைசேர்க்கும் தோணியாக இருப்பது ஆசிரியரே.கல்வியினூடாக சமூக நகர்வு இடம்பெறுகின்றது என்றால் அதற்கும் மூலகர்த்தாவாக இருப்பது ஆசிரியரே. அதாவது ஒருவரின் சமூக, பொருளாதார அந்தஸ்து, கற்ற கல்வியின் காரணமாக பெற்றுக் கொண்ட தொழிலின் காரணமாக உயர்கின்றது என்றால் ஒரு சமூக வகுப்பிலிருந்து உயர்ந்த சமூக வகுப்பொன்றிற்கு உள்வாங்கப்படுகின்றான் என்றால், அதன் பின்னணியில் இருப்பது ஆசிரியரே அன்றி வேறு எவரும் அல்ல.எனவே சமூக அந்தஸ்த்தையே மாற்றி அமைக்கின்ற பணி ஆசிரியரின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பின் இவ்வாறான நிலையை நன்கு அவதானிக்க முடிகின்றது.சமூகத்தில் அடிமட்டத்தில் இருந்து உயர்மட்டத்தை அடைந்து பிரகாசிப்போர் நம்மிடையே பலர் உள்ளனர்.

கல்வியைக் கற்றுக்கொடுப்பதுடன், ஒழுக்க விழுமியங்களை வளர்த்து மனிதனை நற்பிரஜையாக்குவது அல்லது அவனைப் பூரண மனிதனாக்குவது ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நேரடியான பொறுப்பாகும்.இதற்கு மேலதிகமாக ஆசிரியரின் பணி வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றது என்பது உன்னிப்பாகப் பார்த்தால் புரியும்.

கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி.கல்வி என்பது வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதில்லை. ஆனால் வாழ்க்கை அதுவாகவே உள்ளது என்று ஜோன் டூவி கூறியிருப்பதிலிருந்து வாழ்க்கை, கல்வி இரண்டையும் வேறு பிரித்துப் பார்க்க முடியாது.அவை இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை என்பது தெளிவாகின்றது.ஆசிரியர் மாணவனை வடிவமைக்கின்றார். அதனூடாக தனி மனிதனை நன்னெறிப் படுத்துகின்றார். எனவே தனிமனிதனின் கூட்டாக, குழுவாகக் கருதப்படுகின்ற சமூகத்துக்கே வழிகாட்டுகின்றார்.அதன் மறுபக்கமும் உண்டு.ஆசிரியரால் அல்லது பாடசாலையால் இனங்காணப்படாதவன் அல்லது புறந்தள்ளி விடப்பட்டவன் சமூகத்தினால் பெருங்குற்றவாளியாக இனங்காணப்படுகின்றான் என்பதையும் மறுக்க முடியாது. பல குற்றவாளிகளின் பேட்டிகள், சுயசரிதைகள் இதனை நிரூபிக்கின்றன.தேசத்தின் தலைவிதி அத்தேசத்தில் உள்ள பிள்ளைகளால் பெற்றுக்கொள்ளப்படும் கல்வியினால் தீர்மானிக்கப்படுகின்றது என அரிஸ்டோட்டில் கூறியிருப்பதைப் பார்க்கும்போது ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணி எவ்வாறானது என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதன் அவசியம் புரிகின்றது.வைத்தியரின் சிகிச்சை, அதன் சாதக, பாதகங்கள் குறிப்பிட்ட நோயாளியை மட்டும் சார்ந்திருக்கின்றது. ஆனால் ஆசிரியரின் உருவாக்கம் தனி மனிதன் சார்ந்ததாக இல்லாமல் சமூகத்தையே பாதிக்கின்றது.அதனால்தான் சிறைச்சாலைகள் மூடப்படுவதற்கும் பாடசாலைகள் திறக்கப்படுவதற்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படும் அனைவரும் அதன் மகத்துவத்தை உணர்ந்தவர்களாக வருவதில்லை.தொழிலொன்று தேவை என்பதற்காக அல்லது ஒரு சில வசதிகளுக்காக(விடுமுறை,கடமை நேரம் போன்ற) வந்து சேர்வோரும் உள்ளனர். சேவைக்கு முன்னரான பயிற்சி எல்லோருக்கும் கிடைப்பதில்லை.இவ்வாறான சில சில குறைபாடுகள் காரணமாக ஆசிரிய சேவையின் மகத்துவமும் மாண்பும் நாளுக்கு நாள் குறைந்துவருவது போல் தெரிகின்றது.ஆசிரியருக்குப் பணிவிடை செய்து, அவர்களது அன்பைப் பெற்று அவர்களையே பின்பற்றி அடியொற்றி வாழ்ந்த காலம் மறைந்துவிட்டது. பரீட்சைக்குத் தயார்படுத்துவது மட்டுமே பாடசாலையின் பணியாக மாறிக்கொண்டு வருகின்றது.பாடசாலை நேரத்துடன் ஆசிரியரின் கடமையும் முடிந்து விடுகின்றது.நவீன தொழில்நுட்பம் எல்லோரையும் வசப்படுத்தி விட்டிருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க சமூக சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியர்கள் இன்னும் உள்ளனர்.சமூகம் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள் என்பவற்றினூடாக சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்களே. சேவைக்காலத்தில் மட்டுமன்றி அதன் பின்னரும் கூட சமூகத்துக்கு ஒளியூட்டுபவர்களாகவும், உரமூட்டுபவர்களாகவும் ஆசிரியர்கள் இருந்து வருகின்றனர். மெழுகுவர்த்தி ஒளியைக் கொடுத்து விட்டு உருகிவிடுகின்றது.ஆசிரியர்களும் இவ்வாறானவர்களே என்பதை மறுக்க முடியாது.சமூகத்தின் வழிகாட்டிகளாக இவர்கள் இல்லாவிட்டாலும் இன்னும் சமூகம் சீர்கெட்டுப் போவதற்கே வாய்ப்பு அதிகம்.வழுக்கி, சறுக்கி விழுந்தவர்களைத் தூக்கிவிடுவதும், உழைப்பு உழைப்பு என்று ஓடிக்கொண்டிருக்கும் சமூகத்துக்கு விழிப்பூட்டக்கூடியவர்களாக இருப்பதும், இருப்பதற்கு அருகதையுடையவர்களும் ஆசிரியர்களே. ஆய்வொன்றின் படி, இடைநிலைப் பள்ளி மாணவர்களின் நோக்கில் ஆசிரியர்கள் இவ்வாறு இனங்காணப்படுகின்றனர்.

- ★ஒழுங்கை நிலை நாட்டுபவர்
- ★கண்டிப்பானவர்
- ★மாணவர்களைத் தண்டிப்பார்
- ★உண்மை பேசுவார்
- ★விளக்கங்களைத் தருவார்
- ★உதவுவார்
- ★நியாயமானவர்
- ★அன்பானவர்
- ★சிநேக பூர்வமானவர்
- ★பக்கச்சார்பற்றவர்

மாணவர்கள் மட்டுமல்ல முழுச் சமூகமும் ஆசிரியர்களிடம் மேற்கூறிய பண்புகளையே எதிர்பார்க்கின்றது. அதனால்தான் விரும்பியோ விரும்பாமலோ சமூகத்தின் தலைமைத்துவமும் சுற்றிச்சுற்றி ஆசிரியர்களையே வந்துசேர்கின்றது.பெரும்பாலும் சமூகத்தின் கௌரவத்துக்கும், நன்மதிப்புக்கும் உரியவர்களாகி விட்ட ஆசிரியர்கள் எப்போதும் சமூகப் பணியில் இரண்டறக் கலந்திருப்பதைக் காண்கிறோம்.

(தொடரும்...)

(எம்.எம்.ஆர். ரபாக்கா )
உதவி அதிபர்
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கொழும்பு- 04

---

## கல்விச் செய்திகள்

சீரற்ற காலநிலை காரணமாக இம்முறை சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதியை எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி வரை நீடிக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி இம்மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடையும் என ஏற்னவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக கல்விச் சான்றிதழ்களை இழந்த அனைவருக்கும் அவற்றை இலவசமாக வழங்குவதற்கு பரீட்சை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★

சீரற்ற காலநிலை காரணமாக சப்ரகமுவ மற்றும் தென் ஆகிய இரண்டு மாகாணங்களில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்படும் என்று மாகாண கல்வி திணைக்களங்கள் அறிவித்துள்ளன. இந்நிலையில், தொடரும் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் காரியாலயம் வெளியிட்டுள்ளது. எனினும், பாடசாலைகள் திறக்கப்படுவது மற்றும் மூடப்படுவது குறித்த முடிவுகளை அதிபர்களால் எடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு வழங்கியுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக நடைபெற இருந்த பல்வேறு பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. 27 மற்றும் 28 ஆகிய தினங்களில் நடைபெற இருந்த பரீட்சைகள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நவமணி


# முஸ்லிம் சமூகத்துக்குள்ள அவசரப்படுதல் வியாதியால் அவசர அரசியல் தலைவர்களாகவே செயற்படுகிறோம்

## பிரதி அமைச்சர் அமீர் அலி



(வத்துகாமம் நிருபர்)

அவசரப்படும் சமூகத்தின் அவசர அரசியல் தலைவர்களாகவே நாம் செயற்பட்டு வருகிறோம். ஆனால் இவை அனைத்திலும் நிதானம் தேவை என பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார். மடவளை வை.எம்.எம்.ஏ. வினால் ஒழுங்கு செய்யப்பட்ட கைத்தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டு மக்களுக்கு மத்தியில் நல்ல சிந்தனைகள் ஏற்பட வேண்டும். அது வெறுமனே உடையில் மாத்திரம் இருக்க முடியாது. நடைமுறை வாழ்வில் அது பிரதிபலிக்க வேண்டும். அதனூடாக உருவாகும் எமது பக்குவப்பட்ட வாழ்வு மூலம் எல்லாம் சிறக்க வேண்டும்.

மனித சமூகம் எங்கெல்லாம் வாழ்கின்றதோ அங்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக அமைச்சர்கள் பல்வேறு சேவைகளை தம்மால் இயன்ற வரை செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் மடவளைக் கிராமத்திற்கும் சேவைகளைப்புரிய அமைச்சர் ரிசாட் பதியுதீன் முன்வந்துள்ளார். கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். அதுபோல் ஒரு விடயம்தான் கடந்த 2015ஆம் ஆண்டு இடம் பெற்றது.

அன்று ஆட்சி மாற்றத்திற்கு உரிய நேரமாக, உரிய பணியாக நான் கட்சி மாறுவதை முடிவாகக் கொண்டேன். அதுவே அன்று சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனை சிலர் சுவாரஸ்யமாகப் பார்க்கலாம். ஆனால் அது எனது பலப்பரீட்சையாகவும் விஷப்பரீட்சையாகவும் இருந்தது. இறைவன் பாதுகாத்தான் அத்தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதன் மூலம் எனது நிலைமை தப்பிப் பிழைத்தது.

இன்று முஸ்லிம் சமூகத்திற்கு பிரச்சினைகள் உண்டு. அதனை தீர்ப்பதற்கு சகல உறுப்பினர்களும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். சில சமூக வலைத்தளங்களில் சில அடிக்குறிப்புக்கள் எழுதுவதுபோல் நிலைமை இல்லை. நாம் அதனைக் கண்டு கொள்வதில்லை. சகல முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்வர்களும் சமூக நலனுக்கு கட்சி வேறுபாடு இன்றி பாடுபட்டு வருகின்றனர்.

இன்று முஸ்லிம் சமூகத்தை பிடித்துள்ள ஒரு வியாதிதான் அவசரப்படுதல். எல்லாவற்றிலும் அவசரம் என்ற மன நிலை காணப்படுகிறது. திருமணம் முடிப்பதிலும் அவசரம், பணமீட்டுவதிலும் அவசரம், குழந்தை பெறுவதிலும் அவசரம், வீடுகட்டு வதிலும் அவசரம். உணவுவகைகளைத் தெரிவு செய்வதிலும் அவசரம். இறுதியில் நோயைத் தேடுவதிலும் அவசரம். ஜனாசாவிலும் அவசரம். இப்படியாக எல்லாவற்றிலும் அவசரப்பட்ட மன நிலையில் வாழ்கிறோம். எனவே அவசரப்படும் சமூகத்தின் அவசர அரசியல் தலைவர்களாகவே நாம் செயற்பட்டு வருகிறோம். ஆனால் இவை அனைத்திலும் நிதானம் தேவை. அவசரப்பட்டு எதனையும் செய்து விடக் கூடாது.

எமது அமைச்சர் ரிசாட் பதியுதீன் விமர்சிக்கப்படாத நாளே கிடையாது. அவரைப் பற்றி விமர்சிக்காத ஊடகங்களே கிடையாது. அது சிங்கள ஆங்கில ஊடகங்களானாலும் சரி அவர்பற்றிய விமர்சனம் இருக்கும். சிலருக்கு அமைச்சர் ரிசாட் பதியுதீன் பற்றி விமர்சிக்காது விட்டால் தூக்கம் வருவதும் இல்லை.

எனவே அனைவரும் ஒரு கொடியின் கீழ் இணைந்து ஒற்றுமைப்பட வேண்டும். ஒற்றுமையினூடாகவே நாம் வெற்றி பெற முடியும். என்றார்.

இவ்வைபவத்தில் மாகாண சபை அங்கத்தவர்களாக செய்னுல் ஆப்தின் லாபிர், ஹிதாயத் சத்தார் முன்னால் பாத்ததும்பறை பிரதேச சபை அங்கத்தவர் ரியாஜ் முஸ்தபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைவாக, வவுனியா மாவட்டத்தில் தொழில் முயற்சியாளர்களின் நலன் கருதி கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழான நிறுவனங்களை ஒருங்கிணைத்து வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் தொழில் முயற்சி இளங்காளலுக்கும் ஊக்கமூட்டலுக்குமான விழிப்புணர்வுச் செயலமர்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான றிப்கான் பதியுதீன், ஜயதிலக்க மற்றும் பிரதேச செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஹரீஸின் தந்தை மறைவுக்கு ரவூப் ஹக்கீம் அனுதாபம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர்களில் ஒருவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸின் தந்தை ஹபீப் முஹம்மதின் மறைவு கட்சிக்கும் சமூகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஹபீப் முஹம்மதின் மறைவை யொட்டி, அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பகாலப் போராளியான இவர், கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்புடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணிவந்தார். அவரின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர். தன்னுடைய வீட்டை கட்சியின் அலுவலகமாக பாவிப்பதற்கு கொடுத்துதவிய ஒரு பெருந்தகை.

கல்முனை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த தொழிலதிபரான இவர், நீண்டகாலமாக கல்முனை முஹிதீன் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவராக பணியாற்றியிருக்கிறார்.



கொடை வள்ளலான இவர், பல்வேறு தரப்பினர்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வந்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நீண்ட காலப் போராளியான ஹபீப் முஹம்மதின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பாவங்களை மன்னித்து, மறுமை நாளில் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனம் கிடைப்பதற்கு நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக! அன்னாரின் பிரிவினால் துயருறும் பிரதி அமைச்சர் ஹரீஸுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அவர் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

# கல்முனை வலய ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் ஆசிரியர் மாணவர் நலம் பேணவில்லை

## தலைவர் அஹுவர் சுட்டிக்காட்டு



(நூறுல் ஹுதா உமர்)

அண்மையில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் எம்.ரி.எம். நிஸாம் மேற்கொண்ட ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் ஆட்சேபனைகளும் மறுப்புக்களும் பலரினால் எழுப்பப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த இடமாற்றம் தொடர்பில் இலங்கை மகா ஆசிரியர் சங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவை பற்றி அதன் தலைவர் ஏ.எம்.அஹுவர் ஆசிரியர் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

அண்மைய வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கியதில் ஏற்பட்டுள்ள அநீதிகள் குறித்து நியாயம் கேட்கும் வகையில் கல்முனை மாகாண மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான பதிவை மேற்கொண்டுள்ளோம்.

அதுமாத்திரமன்றி கடந்த புதன்கிழமை 24இல் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் அவரின் இணைப்புச் செயலாளர் உள்ளிட்ட சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தோம்.

அந்தச் சந்திப்பின் போது பாலூட்டும் ஆசிரியர்கள்;, கணவன் மனைவி அரச உத்தியோகத்தில் ஈடுபடுபவர்கள்;, ஆசிரிய பெற்றோர்களின் அரவணைப்புக்குட்பட்ட குழந்தைகள், இந்த வருடம் தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அடுத்த வருடம் தரம் இரண்டுக்கு கற்பிக்க வேண்டிய நியதியை இந்த இடமாற்றம் துஷ்பிரயோகம் செய்துள்ளது.

இது போன்ற பல்வேறு முறைகேடுகளைக் கொண்டு அண்மைய இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. இவைகளுக்கு அப்பால் தாபன விதிக்கோவை, கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை, கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் போன்றவற்றின் முன்மொழிவுகளை மீறியதாகவும் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இவைகள் மாத்திரமன்றி இரண்டு விதமான இடமாற்றங்களை இது கொண்டுள்ளது.

1. கல்முனை வலயத்தைச் சார்ந்த ஆசிரியர் தமது முதலாவது நியமனக் காலத்தின் போது கல்முனை வலயத்திற்கு வெளியே கடமையாற்றவேண்டிய வருடத்தை பூர்த்தி செய்யாது, அதற்கு முன்னர் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர்களை அந்த காலகட்டத்தை நிறைவு செய்யும் வகையில் அவர்களை மீண்டும் வெளிவலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை. இதிலும் குறிப்பாக இன்னொன்றை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக வெளிவலயத்தில் 60 மாதங்களை பூர்த்தி செய்ய வேண்டிய ஒருவர் 57 மாதங்களை நிறைவு செய்த நிலையில் உள்ள ஒருவருக்கு மீண்டும் நான்கு வருடங்கள் வெளிவலயத்திற்கு கடமையாற்ற வழி செய்யும் வகையிலும்; இந்த இடமாற்றம் நிகழ்ந்திருப்பது பெரும் அநீதியாகும்.

2. கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஒருவர் இதுவரை வெளி வலயத்தில் கடமையாற்றாதவர்களை கடமையாற்றுமாறும் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இடமாற்றம் செய்யப்படுவது அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை அல்லவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இடமாற்றத்தின் காரணமாக பின்வரும் அசௌகரிகங்களை எமது ஆசிரியர்கள் அனுபவிக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

போக்குவரத்து சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் இந்த இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. உதாரணமாக மருதமுனையைச் சேர்ந்த ஒருவருக்கு இறக்காமத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகின்ற போது குறைந்த பட்சம் மூன்று பேரூந்துகளில் பயணிக்க வேண்டியதும் அதனால் போக்குவரத்து நேரம் அதிகமாக தேவைப்படுகின்ற நிர்பந்தத்தை ஏற்படுத்துகின்றது.

மற்றும் 55 வயதை எட்டியவர்களுக்கும் கூட குறிப்பாக பெண் ஆசிரியர்களை இவ்விடமாற்றத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும் வெளிவலயத்திற்கு செல்ல பணிக்கப்படுவோர்களில் பெரும்பாலனவர்களுக்கு குறித்த வெளிப்பிரதேசங்களில் அமைந்துள்ள பிரதான வீதிக்கு தூரப்படுகின்ற அளவில் அமைந்துள்ள பாடசாலைகளை குறிப்பிட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை ஒரு வக்கிரமான போக்காகவே நாம் பார்க்கின்றோம். இவைகளை நாம் கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டிய போது அவர் இதில் அநியாயம் நடந்திருக்கிறதுதான் என்று ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி உரிய நடவடிக்கை விரைவாக எடுப்பதாகவும் எம்மிடம் உறுதியளித்தார்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சரின் செயலாளரை இடமாற்றம் பற்றி சந்தித்த போது, வழங்கப்பட்டிருக்கின்ற வருடாந்த இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் கூறினோம். இதுபற்றி கவனத்தில் தான் எடுத்து தேவையான நடவடிக்கைகளை எதிர்வரும் 29.05.2017 இற்கு முன்னர் எடுத்து உங்களுக்கும் அறிவிப்பேன் என்று உறுதியளித்தார்.

கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளரை சந்திக்கச் சென்ற போது அலுவலகத்தில் அவர் இருக்கவில்லை ஆயினும் அங்குள்ள உயர் அதிகாரி ஒருவரிடம் எங்களின் வருகையின் நோக்கத்தை தெளிவாக குறிப்பிட்டோம். அவர் செயலாளரிடம் இவற்றை எடுத்துக் கூறுவதாகவும் சொன்னார். இச்சந்திப்புக்கு முன்னரே செயலாளருக்கு எம் அமைப்பினால் இடமாற்றம் குறித்தான முறைகேடுகளை விபரித்து கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரச்சினைக்குரிய வருடாந்த இடமாற்றம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருக்கு நாம் அனுப்பி வைத்திருந்த கடிதம் தொடர்பில் சந்தித்த போது, எமது கடிதம் குறித்து எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கை பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருப்பதை எம்மிடம் சுட்டிக்காட்டப்பட்டது. மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வியமைச்சின் செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் எமக்கு உறுதியளித்தார்.

எது எவ்வாறு இருந்த போதிலும் வழங்கப்பட்டிருக்கின்ற வருடாந்த இடமாற்றம் என்பதில் முறைகேடுகள் அதிகம் இருப்பதாக நாம் உறுதியாக நம்புகின்றோம். அத்தோடு இந்த இடமாற்றம் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய இரு தரப்பினர்களின் நலன்களிலும் பாதிப்புக்களை கொண்டு வரக்கூடியது என்பதாலும் இந்த இடமாற்றத்தை இலங்கை மகா ஆசிரியர் சங்கம் நிராகரிக்கின்றது. ஆகவே இடமாற்றத்தை இரத்துச் செய்வதில் எந்தத் தடைகள் வந்தாலும் அதனைக் கடந்து சென்று நீதியைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

# கிழக்கில் நலிவுற்ற ஏழை மக்களுக்கான சேவைகள் அனைவருக்கும் கிடைக்கும்

## மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.சி.அன்சார்



(மருதமுனை நிருபர்)

கிழக்கு மாகாணத்திலே சமூக சேவைத் திணைக்களத்தின் மூலமாக செய்யக் கூடிய அனைத்து சேவைகளையும் நலிவுற்ற ஏழை மக்களுக்குச் செய்வதற்கு நான் உறுதி பூண்டிருக்கின்றேன் அதே போன்று எமது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் ஆயத்தமாக இருக்கின்றார்கள் தகுதியான அனைவருக்கும் எமது திணைக்களத்தின் சேவைகள் நிச்சயம் கிடைக்கும் என கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.சி.அன்சார் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்கம் ஏற்பாடு செய்த நலிவுற்ற மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில்பெரிய நீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.இங்கு விஷேட உரையாற்றிய போதே மாகாணப் பணிப்பாளர் அன்சார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது சமூக சேவைகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகளை மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்காகத்தான் இந்த விழிப்புணர்வுக்கருத்தரங்கை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம். சமூக சேவைகள் திணைக்ளம் என்றால் என்ன அது எவ்வாறான சேவைகளைச் செய்கின்றது யாருக்குச் செய்கின்றது என்பதை இன்று நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

வயது குறைந்தவர்கள்,நலிவுற்றவர்கள்,விதவைகள்,கணவனைப் பிரிந்து வாழ்பவர்கள். நோயாளர்கள்,அங்கவீனர்கள்,சுய தொழில் முயற்ச்சியாளர்கள் உள்விட்ட பலருக்கு எமது திணைக்களம் உயர்வான சேவைகளை வழங்கி வருகின்றது பாதிக்கப்பட்ட வர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற எமது சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மூலமாக விண்ணப்பித்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் பிரதேச செயலாளர்கள் உதவிப் பிரதேச செயலாளர்கள்,சமூக சேவைத்திணைக்ளத்தின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்,கிராம உத்தயோகத்தர்கள் உள்விட்ட பெருந்தொகையானோர்கள் கலந்து கொண்டனர்.






# மல்லவப்பிட்டி தாக்குதல்

## மோத வைக்கும் சதி

இக்பால் அலி

பள்ளிவாசல் தாக்குதல் என்பது பொதுவாக சமயத்தை நேசிக்கின்ற எந்த மனிதனாலும் ஜீரணித்துக் கொள்ள முடியாத ஒரு விடயமாகும். குருநாகல் மல்லவப்பிட்டி பள்ளிவாசல் தாக்குதல் கூட இலங்கையிலுள்ள சிங்கள தமிழ் கிறிஸ்தவ ஆகிய பெரும்பான்மையின சகல மக்களும் ஏற்றுக் கொள்ளுகின்ற ஓர் அம்சமல்ல. எனினும் நாட்டில் தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக பல பாகங்களிலும் ஓர் அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ள காலகட்டத்தில் குருநாகல் மல்லவப்பிட்டிய பள்ளி மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் 21-05-2017 ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3.30 மணி அளவில் இடம்பெற்றது. மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு நபர்களே இந்த குண்டுத் தாக்குதலை நடத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதல் காரணமாக பள்ளிவாசல் மேல் மாடியில் உள்ள கண்ணாடிகளுக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் சுவரும் சேதமடைந்து கருகிப்போயுள்ளது. பள்ளிவாசலுக்கு அருகில் செல்கின்ற தொரட்டியாவ வீதியில் நின்று பள்ளிவாசலின் பின்பகுதிக்கே இந்த தாக்குதலை நடத்தி விட்டுச் சென்றுள்ளனர், ஆறு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளதாகவும் இதில் இரண்டு குண்டுகள் வெடிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குருநாகல் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிரகரி குரேயின் உத்தரவின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் பற்றி அறிந்து அவ்விடத்தைப் பார்வையிடுவதற்காக உடனே வடமேல் மாகாண சபை உறுப்பினர் அசோக பெரேரா, வடமேல் மாகாண சபை உறுப்பினர் ரிஸ்வி ஜவஹர்ஷா, ஸ்ரீலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார், குருநாகல் மாவட்ட ஸ்ரீ சு. கட்சி அமைப்பாளர் முஹமட் பாஹிம், வைத்திய அதிகாரி சாபி, முன்னாள் மாவத்தகம பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் முஹமட் ரிபாழ், குருநாகல் பிரதேச சபை உறுப்பினர் அமான் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் இங்கு வருகை தந்திருந்தனர். மறுநாள் 23ஆம் திகதி திங்கட்கிழமை தனிப்பட்ட விஜயம் காரணமாக வெளிநாடு சென்றிருந்த வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார், அயல்கிராமங்களிலுள்ள பௌத்த விஹாராதிபதிகள், மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர், கிராம உத்தியோகஸ்தர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொண்ட சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பல கருத்துக்களை எல்லோரும் மனம் விட்டுப்பகிர்ந்து கொண்டனர்.

இது குருநாகலில் நீண்ட காலமாகவுள்ள சிங்கள முஸ்லிம் ஒற்றுமையை சீர் குலைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சம்பவம். யாராக இருந்தாலும் இந்தப் பள்ளித் தாக்குதல் சம்பத்தை அனுமதிக்கமாட்டார்கள். இதன் பின்னணியில் இருப்பவர் பற்றி எமக்கு யார் என்று தெரியாது. எந்தப் பக்க அணியைச் சார்ந்தவர்கள் என்று எமக்கு அடையாளப்படுத்த முடியாது. எனினும் இது தொடர்பாலக புலனாய்வுத் துறையினர் பின்தொடர்ந்து கண்டு பிடித்தல் வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர் யார் எந்த அமைப்பைச் சார்ந்தவர் எந்த நோக்கத்திற்காகச் செய்தார் என்பது பற்றி அறியப்பட வேண்டும். இந்தச் சம்பவம் முஸ்லிம் பிரிவினைவாதிகளால் கூட நடந்திருக்கலாம். நாட்டுக்குள் குழப்பத்தை உண்டு பண்ண வேறு நாட்டைச் சார்ந்தவாகள் கூட இதன் பின்னணியில் இருக்க முடியும். இது தொடர்பாக தேடிப்பார்த்தல் அவசியமாகும். இந்தச் சம்பவம் உண்மையிலேயே ஒற்றுமை இல்லாமற் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டதாகும்.

இத்தகைய பாரதூரமான செயற்பாட்டை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் அந்த நபர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு நாம் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அங்கு வருகை தந்த விஹாராதிபதிகள் உட்பட பிரதேச செயலாளர் கருத்தினை முன் வைத்தார்கள்.

அதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் போது பொலன்னறுவை தம்பாளையில் நடைபெற்ற சம்பவத்தில் 14 வயதுடைய பௌத்த தேரரை நான்கு முஸ்லிம்கள் தாக்கியதாக செய்தி பரப்பப்பட்டிருந்தது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தேரரை வைத்திய அதிகாரிகள் முழுமையாக பரிசோதனை செய்த பின்னர் இவரை எவரும் தாக்கியதற்கான எந்த அடையாளமும் இல்லை என வைத்திய அதிகாரிகள் தெளிவான கருத்தை தெரிவித்துள்ளார்கள். ஆனால் தாடி வைத்த நான்கு பேர் முகத்தை மூடிக் கொண்டு வந்து என்னைத் தாக்கினார் என்று தேரர் வாக்கு மூலம் கொடுத்திருந்தார். இவரைப் பரிசோதனை செய்த நான்கு வைத்தியர்கள் இவர் உடம்பில் எந்த கையும் படவில்லை என்று அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள். இந்த தாக்குதலை நடத்தியவர்களுடைய வாகன இலக்கத்தை கேட்ட போது அந்த தேரர் அதனையும் சொல்ல வில்லை.

இதே நேரம் பௌத்த விஹாரைகளை தாக்குதல் நடத்தி விட்டு முஸ்லிம்களுடைய பெயரைப் போடலாம். சீ. சீ. டி கமராக்கள் விஹாரைகளிலும் பொருந்திக் கொள்ளுவது அவசியமாகும். யார் எவர் என்பதை மிக இலகுவாக அடையாளம் காணலாம் என்ற கருத்தினை அவர்களிடம் அவர் சுட்டிக் காட்டினார்.

வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார் கருத்துத் தெரிவிக்கையில்நான் நாட்டில் இருக்கவில்லை. ஊடக வாயிலாக அறிந்தேன். நான் இன்று தான் நாட்டுக்கு வந்தேன். இதற்குப் பின்னர் எத்தகைய முன்னெடுப்புக்களை மேற்கொள்வது என்று தொடர்பாக நிர்வாகம் அயலிலுள்ள விஹாராதிபதிகள் மற்றும் பிரதேச செயலாளர் சகிதம் கலந்துரையாடினோம். சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையே இருக்கின்ற ஒற்றுமையை சீர்குலைக்கின்ற ஒரு செயற்பாடாக இதனை சிங்கள மக்கள் கருதுவதாகத் தெரிவித்தார்கள்.

நாங்களும் இதனைத் தான் கருகின்றோம். இது சிங்கள முஸ்லிம் மக்களிடையே இருக்கின்ற ஒற்றுமையை சீர்குலைக்கின்ற செயற்பாடாகும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடக்கும் போது அரசாங்கம் கண்டு கொள்வதில்லை என்ற ஆதங்கத்தில் சிறுபான்மையின மக்கள் தான் அரசாங்கத்தை மாற்றியமைத்தார்கள் என்ற குற்றச் சாட்டு நிலவிக் கொண்டிருக்கிறது. இந்த குற்றச் சாட்டை மூடி மறைப்பதற்காக சில நேரம் மீண்டும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறும் போது நல்லாட்சி அரசாங்கத்திலும் இந்தச் செயற்பாடு நடைபெறுகின்றது. இதை அரசு கண்டு கொள்வதில்லை. இதனைப் பார்க்கின்ற போது இரண்டு அரசாங்கத்திற்கும் வித்தியாசம் இல்லை. எங்களுடைய ஐக்கிய தேசிய கட்சி ஆதரவுடன் நிறுவப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு சேறுபூசுகின்ற ஒரு நடவடிக்கையாக இருக்கலாம் என்று நான் சந்தேகப்படுகின்றேன்.

இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த மிகவும் அவசரமாக கடுமையான சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். பொலிஸார் அப்போதுதான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு வாய்ப்பாக அமையும். இந்தச் சட்டத்தை எமது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அவசர காலச் சட்டமாக நிறைவேற்றி சட்ட மா அதிபருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் வன்முறைப் பேச்சுக்களையும் இனவாத ரீதியில் வெளியிடும் வீடியோ நாடாக்களின் பதிவுகளையும் வன்முறை ரீதியாக நடத்தப்படும் பத்திரிகையாளர் மாநாடுகளையும் தடுத்து நிறுத்த முடியும் என நான் கருதுகின்றேன்.

ஆனாலும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் முஸ்லிம் மக்களுடைய வணக்கஸ்தலமான பள்ளிவாசல்களுக்கு தாக்குதல் நடத்துவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்தச் செயலை நான் ஏற்றுக் கொள்வதற்குத் தயார் இல்லை. எந்தவொரு மத ஸ்தானங்களுக்கும் தம் சொந்த நோக்கத்திலோ அல்லது அரசியல் நோக்கத்திலோ தாக்குதல் நடத்துவது கண்டிக்கத் தக்கது என்று நான் வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். என்னால் இயன்றளவு இந்தப் பள்ளிவாசலுக்கு உதவத் தயாராக இருக்கின்றேன்.

**பள்ளிவாசலின் தலைவர் முஹமட் சகரிய்யா முஹமட் முனீர்**

கடந்த நான்கு வருடத்திற்கு முன்னர் பியர் போத்தல் ஒன்றை எறிந்து விட்டுச் சென்றிருந்தனர். அதுவும் தொரட்டியாவ வீதிப் பக்கம் தான். அந்த நேரத்திலும் பிறதிப் பொலிஸ் மா அதிபர் தொடக்கம் எல்லோரும் வந்தார்கள். அந்தச் சம்பவம் பற்றி நாங்கள் பெரியளவில் கவனத்தில் கொள்ள வில்லை. இது தொடர்சியாக நடந்து கொண்டு இருக்கிறது. இது மாதிரி சின்ன விசயங்கள் நடந்து கொண்டு இருக்கின்றது. இதற்கு முன்னர் அண்மையிலுள்ள தெலியாகொன்ன பள்ளிவாசலுக்கும் கல்லால் எறிந்து தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றிருந்தனர்.

எங்களால் இதை யார் செய்தது என்று சொல்ல முடியாது. இதனை ஒரு குழுவினர் செய்கின்றனர். மூன்று மோட்டார் சைக்கிளில் ஆறு பேர் வந்துள்ளார்கள். சீ. சீ. டி கமராவில் முன்னால் ஒரு ஆட்டோ ஒன்று வருகின்றது. அது வந்து அவர்களுடைய பாதுகாப்புக்காக வந்திருக்கலாம் என நாம் நினைக்கின்றோம். இந்தச் சம்பவம் 3.30 மணி அளவில் நடந்துள்ளது. சம்பவம் நடந்து 5 நிமிடத்திலே இங்கே வந்து விட்டேன்.

நான் வந்த போது இரண்டு பெற்றோல் குண்டுகள் அடித்தவுடன் பத்தி அணைந்து விட்டது. இன்னும் இரண்டு பத்திக் கொண்டிருந்தது. அணைந்த குண்டுகளுக்கு அதற்குப் பெற்றோல் போதாது. நான் வந்து 119 தொலை பேசியுடன் தொடர்பு கொண்டேன். 15 நிமிடம் வரை லைன் கிடைக்கவில்லை. பின்னர் அவர்களுக்கு அறிவித்தல் விடுத்து சுமார் அரை மணித்தியாலயம் கழித்தே பொலிஸார் இங்கு வருகை தந்தார்கள். அன்று இரவு பள்ளிவாசலுக்கு முன்னால் பெருந்தொகையான இளைஞர்கள் வந்து நின்றார்கள். ஆனால் அவர்களுக்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை. அவர்கள் இசைக் கச்சேரிக்கு சென்று வந்தவர்கள். இந்தசம்பவத்துடன் இந்த இளைஞர்கள் தொடர்பு பட்டிருக்கலாம் என சந்தேகித்துச் சீ. சீ. டி கமராவைப் பார்த்தால் அது அவர்கள் இல்லை. சீ. சீ டி கமரைப் பார்க்கின்ற போது பயந்து பயந்து தம் முகத்தைக் காட்டிக் கொள்ளாமல் நடப்பது போன்ற காட்சிகள் அதில் உள்ளன.

இதில் குருநாகலில் மல்லவப்பிட்டிய தெலியாகொன்ன என்ற இடம் மிக முக்கியமான இடம். இது முஸ்லிம்களுடைய மிகப் பெரிய ஊர். ஒரு பலம் வாய்ந்த இடம். இந்த ஊர் என்று சொன்னால் எல்லோருக்கும் பயம். இந்த ஊரின் பலத்தைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். இந்த ஊரைத் தாக்கினால் மறு ஊரைத் தாக்குவது மிக இலகுவானது. நான் ஒரு வியாபாரி. அந்த வகையில் அந்த மக்களுடன் நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். ஒரு விபத்து ஏற்பட்டு விட்டால் அந்த இடத்தில் இருந்து மீண்டு வந்தது என்பது மிகப் புதுமையானது என்று அவர்கள் கூறுவார்கள். இவ்வாறானதொரு இடத்தில் அவர்கள் கை வைத்தது எங்களை கோழைகளாக்குவதற்கான அர்த்தமாகத்தான் கொள்ள வேண்டும். ஆனால் நாங்கள் கோழைகள் இல்லை.

ஒரு சட்டம் ஒன்று இருக்கிறது. அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைக்கு நாங்கள் கட்டுப்பட்டு இருக்கின்றோம். இதில் முக்கியமான விசயம் சொல்ல வேண்டும். இந்தச் சம்பவம் நடந்து முடிந்த பின்னர். ஒரு சந்தோசமான விடயம் தான் சகல பொலிஸ் அதிகாரிகளும் உடன் வருகை தந்தார்கள்.

அவர்களை நாங்கள் வா என்று சொன்னால் வரவும் போ என்று சொன்னால் போகவும் என்ற நிலைக்கு ஏற்ப செயற்பட்டார்கள். நாங்கள் உங்களுக்கு என்ன வேண்டுமோ அத்தனை உதவிகளையும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கின்றோம் என்று எங்களிடம் கூறினார்கள். நீங்கள் பயப்பட வேண்டும். தேவையான அனைத்துப் பாதுகாப்பு வசதிகளை நாங்கள் தருகின்றோம் என்று கூறினார்கள். அதே போன்று அரசியல் பிரமுகர்கள் பலரும் இங்கு உடன் வருகை தந்து தேவையான உதவிகளைச் செய்தார்கள்.

இங்கே வருகை தந்த பௌத்த பிக்குமார்களுடன் நாங்கள் மிகுந்த நெருக்கமான உறவுகளைக் கொண்டவர்கள். வியாபார ரீதியிலும் அவர்களுடன் நாங்கள் நெருக்கமான உறவைக் கொண்டவர்கள். இங்கு வருகை தந்த பௌத்த பிக்குகளில் ஒருவர் மஹாகோவாவை சேர்ந்தவர். மற்றவர் மெஹியல்ல விஹாரையைச் சேர்ந்தவர். இந்த பௌத்த மத குருமார்கள் எமது பிரதேச முஸ்லிம்களுடன் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய சமய விவகாரங்களின் போது எங்களுடன் தொடர்பு கொள்வார்கள். அவர்களுக்கு நாங்கள் எங்களால் இயன்ற உதவிகளைச் செய்வோம். ஒரு தடவை பிக்குமார்கள் எங்களுடன் கொண்ட நட்பின் காரணமாக எங்களுடைய பள்ளியை மையமாக வைத்து பாதை யாத்திரை வந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு தேவையான பணிவிடைகளைச் செய்து அனுப்பியிருக்கின்றோம். நாங்கள் அவர்களுக்கு கொடுத்த உபசரிப்புக்கள் கௌரவங்களை அவர்கள் ஒரு போதும் மறக்க முடியாது. அதே போல் அவர்கள் செய்கின்ற வெசாக் பொசன் போன்ற சமய நிகழ்வுகளுக்கு ஏதாவது பங்களிப்பைச் செய்வோம். பிரதேச செயலகம் ஊடாக எங்களுக்கு அறிவுறுத்தல் விடுப்பார்கள். அதற்கு நாங்கள் ஏதாவது ஒரு பங்களிப்பை செய்வது வழக்கம். அவர்கள் எங்களிடம் கேட்பார்கள். நாங்கள் கொடுப்போம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் அந்த உதவிகளை சந்தோசமாகவே செய்கின்றோம். இந்தப் பிரதேசத்தில் நாங்கள் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவும் சந்தோசமாகத் தான் இருக்கின்றோம். வேறு ஊரில் இருந்து வந்தவர்களே இந்த தாக்குதலை நடத்தியதாக நாங்கள் பார்க்கின்றோம்.

பொதுவாக இந்தப் பள்ளிக்கு சீ சீ டி வி கமரா போட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் தான் பெற்றோல் குண்டு வீசும் போது வெளிச்சம் வரும் போது முகத்தை மறைத்துக் கொள்வதற்காக முயற்சி செய்வதை நாங்கள் பார்க்கின்றோம். யாரும் கண்டால் தம்மை பிடித்துக் கொன்று விடுவார்களோ என்ற அச்சமும் அவர்களிடம் இருப்பதை சீ சீ டி வி கமரா காட்டுகின்றது. பெற்றோல் குண்டு வைத்து விட்டு ஓடுகின்றார்கள். இந்த பிரதேசங்களைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும் பிடித்தார்கள் என்றால் சும்மா விட மாட்டார்கள் என்றும் தெரியும்.

**உப தலைவர் பழீல் ஹாஜியார்**

எனக்கு பள்ளி தாக்கப்பட்டிருப்பதாக தொலைபேசியில் அறிவித்தார். நானும் உடனே வந்து விட்டேன். 119 க்கு அழைத்தோம் அவர்களிடமிருந்து உடன் பதில் கிடைக்க வில்லை. அவர்கள் அரை மணித்தியாலம் தாமதித்துத் தான் வந்தார்கள் அவர்கள் வரும் போது ஒரே ஒரு போத்தல் திரி மாதிரி பத்திக் கொண்டிருந்தது.

இங்கே அப்போது ஜமாஅத்அல் வந்தவர்கள் 10 பேர் அளவில் தங்கியிருந்தார்கள். அதே போன்று நாங்களும் வந்து விட்டோம். அதனை அணைக்க யாருமே அருகில் செல்ல வில்லை. காரணம் அது பத்தி வெடிக்கும் குண்டுகளாக இருக்கும் என்று கருதி அருகில் செல்லவில்லை. அது மேல் பத்திக் கொண்டிருந்ததால் யாருமே மேலே போக வில்லை. எல்லோரும் கீழே தான் இருந்தார்கள். எங்களது மௌலவி கூட கீழே தான் இருந்தார். நான் எட்டு நிமிடத்திற்குள் நான் வந்து விட்டேன். என்னுடைய வீடு அண்மையில் தான் உள்ளது. அத்துடன் எங்களுடைய நிர்வாகத்தில் 11பேர் உள்ளனர். அவர்களும் தகவல் கிடைத்தவுடன் வந்து இருந்தனர். அத்துடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தொடக்கம் சகல உயர் பொலிஸ் அதிகாரிகளும் வந்து விட்டார்கள். சிலர் சீருடை அணிந்தும் அணியாமலும் வந்து விட்டனர்.

எனினும் சீ சீ டி வி கமராவை வைத்து சம்மந்தப்பட்ட நபர்களை கைது செய்ய முடியும் என்று இங்கு வருகை தந்த அதிகாரிகள் அதிலுள்ள காட்சிகளை கொப்பி பண்ணி எடுத்துக் கொண்டு சென்றுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார் இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஊடகங்களில் காட்டமான அறிக்கையொன்றை வெளியிட்டு இருந்தார்.

அத்துடன் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ரிஸ்வி ஜவஹர்ஷா மற்றும் குருநாகல் மாவட்ட ஸ்ரீ. சு. கட்சி அமைப்பாளர் முஹமட் பாஹீம், வைத்திய அதிகாரி சாபி உள்ளிட்ட இன்னும் பலர் வருகை தந்து பங்களிப்பை வழங்கி இருந்தனர்.

அதேவேளை வடமேல் மாகாண சபை உறுப்பினர் சஹாப்தீன் ஹாஜியார் இந்தப் பள்ளியின் திருத்தப் பணிக்காக ஒரு தொகை நிதியை வழங்கி வைத்தார்.

இத்தகைய நிலையில் பள்ளிவாசல்களுக்கு தாக்குதல் நடத்துவதை அரசாங்கம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என்று அங்கிருந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

பள்ளியில் வுழு செய்து கொண்டிருந்த இந்தச் சம்பவம் குறித்து அழுத வண்ணம் கவலையுடன் பின்வருமாறு தெரிவித்தார். இப்படியான சம்பவங்கள் கடந்த அரசாங்கத்தில் நடந்து கொண்டிருந்த சமயம் தம்மை அசைக்க முடியாது என்ற எண்ணத்துடன் இருந்த முன்னைய தலைவர் தம்முடைய ஆட்சி முடிவடைவதற்கு இரண்டு வருடம் இருக்க பதவி துறந்து போனார். அதே போன்று பள்ளி என்பது அல்லாஹ்வுடைய மாளிகை. இதற்காக மக்கள் இறந்து அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். இந்தப் பாவத்தைச் செய்தவனுக்குத் தண்டனை வெகு தூரமில்லை. நிச்சயம் அவர்களுக்கு தண்டனை உண்டு என்றார்.





# வெள்ளப் பாதிப்பு படங்கள்





## 01

**2017 மே 29**
ஹிஜ்ரி 1438 ரமழான் 03

**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**

ரமழான் முபாறக் பரிசு மழை

நவமணி

| போட்டி - 01 | போட்டி - 02 |
|---|---|
| (திங்கள் – வியாழன்) | (வெள்ளிக்கிழமை) |
| 1ஆம் பரிசு : உம்ரா பொதி<br>2ஆம் பரிசு : மடிக் கனனி<br>3ஆம் பரிசு : கனனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், சான்றிதழ் வழங்கப்படும் |

### போட்டி நிபந்தனைகள்

- **தினமும் 5 கேள்விகள்**
  - 2 பல்தேர்வு வினாக்கள் (விடையை தெரிவுசெய்தல்)
  - 3 கேள்விகளுக்கு விடைகளை எழுதவேண்டும்
- **30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)**
- **வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.**
- **போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது**
- **போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியான அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
- **போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 15, 2017**

01. நோன்பு கடமையாக்கப்பட்டதன் நோக்கம் பற்றி அல் - குர்ஆனில் குறிப்பிடப்படும் இரு சூறாக்களையும் மொழி பெயர்ப்பையும் எழுதுக?

02. அல் - குர்ஆனில் அதிகம் பெயர் குறிப்பிடப்படும் நபி யார்?

03. ஸுன்னா எனும் பதத்தின் விளக்கம் யாது? அது பற்றி அல் - குர்ஆனில் கூறப்படும் ஆயத் ஒன்றை மொழி பெயர்ப்புடன் எழுதுக?

04. திருக் குர்ஆனை முதலில் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?

05. "அல் - குர்ஆனை மறந்த (புறக்கணித்த) நிலைமையில் வாழ்பவர்களை மறுமையில் குருடர்களாக எழுப்புவோம்" எனக் கூறப்படும் வசனத்தை எழுதி, அதனை மொழி பெயர்ப்புடன் தருக?

நவமணி **போட்டி - 01**
**29.05.2017 - திங்கட்கிழமை** நவமணி

பெயர் : ......................................
முகவரி : ......................................
தொலைபேசி : ......................................
தே.அ.அ. இல.: ......................................
கையொப்பம் : ......................................

**Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala**

**மேலதிக விபரங்களுக்கு 0778751032, 0772604964, 0772415415**

# பிரதியமைச்சர் பாலிதவின் மனிதாபிமான பணிகள்






களுத்துறை மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் அரசின் உதவிகள் கிடைக்கப்பெறவில்லை என பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.

களுத்துறை, பாலிந்தநுவர போன்ற பிரதேசங்களுக்கு பலத்த பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நெருங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தில் பல பாராளு மன்ற உறுப்பினர்களும் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருக்கும்போது பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் இணைந்து செயற்பட்டது பெரும் வரவேற்பைப் பெற்றது.

பிரதியமைச்சர் உயிரிழந்த பிரேதங்களை மீட்பதிலும், உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளில் ஈடுபட்டு உதவியும் வருகின்றார்.

# மீண்டும் இலங்கையை அச்சுறுத்தும் டெங்கு






இன்று இலங்கையில் 15இற்கு மேற்பட்ட மாவட்டங்களில் டெங்கு நோய் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றது. ஆட்கொல்லி நோய் என்று அழைக்கப்படும் அளவிற்கு இன்று உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றது.

டெங்கு மற்றும் இது போன்ற ஆட்கொல்லி வைரஸ் நோய்களுக்கு ஹோமியோபதி வைத்திய முறையின் மூலமாக வெற்றிகரமாக சிகிச்சை தரப்பட்டுள்ள போதிலும் பொதுவில் இந்த விடயம் மக்களைச் சென்றடையவில்லை.

டெங்கு நோய்க்கு ஹோமியோபதி வைத்தியமுறை சிறந்த தீர்வினைத் தருகின்றது என்ற தொனிப்பொருளில் கடந்த 25ஆம் திகதி பி.ப. 3:00 மணி தொடக்கம் 5:00 மணி வரை ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் அனுபவம் வாய்ந்த ஹோமியோபதி வைத்தியர்கள் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினர்கள் சிவில் சமூக அங்கத்தவர்கள் நலன் விரும்பிகள் மனித குல ஆரோக்கியவாழ்வு குறித்து அக்கறையுடன் தீவிரமாக செயற்படுகின்ற செயற்பாட்டாளர்கள் ஆர்வமுள்ள ஊடகவியலாளர்கள் முஸ்லிம் எய்ட் அமைப்பின் பணிப்பாளர் அடங்கலாக அதன் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

டெங்கு நோய்க்கு வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்ட பல்வேறு அனுபவங்கள் இங்கு பரிமாறப்பட்டதுடன் பல்வேறு சந்தேகங்களுக்கும் விடையளிக்கப்பட்டது. இங்கு பேசப்பட்ட விடயங்களையும் டெங்கு நோய்க்கு ஹோமியோபதி மருந்துவம் நிவாரணத்தை வழங்கின்றது என்ற செய்தியினையும் பரவலாக்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் ஹோமியோபதி கவுன்சில் தனது செயற்பாடுகளைத் தீவிரமாக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் டெங்கு நோய்க்கு எவ்வாறு ஹோமியோதி மருந்தினை உடனடியாகக் கொண்டு செல்ல முடியும் என்ற ஆலோசனைகளும் இங்கு முன்வைக்கப்பட்டன. இந்த கலந்துரையாடல் முஸ்லிம் எயிட் சிறி லங்கா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## தனியாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மறைவிடத்திலிருந்து ஞானசார தேரர் பொலிஸாரால் தேடப்பட்டுவரும் பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமறைவாகியிருக்கும் இடத்திலிருந்து வார இறுதி சிங்களப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்துள்ளார்.

இந்தப் பேட்டியில் இந்தமுறை தான் சிறைக்குச் செல்லும் போது தனியாகப் போகவேமாட்டேன் விக்னேஸ்வரன், அசாத்சாலி, முஜிபுர் ரஹ்மான், றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியவர்களில் ஒருவருடனேயே செல்வேன் என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வார இறுதி சிங்களப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்துள்ளார்.

இந்தப் பேட்டியில் இந்தமுறை தான் சிறைக்குச் செல்லும் போது தனியாகப் போகவேமாட்டேன் விக்னேஸ்வரன், அசாத்சாலி, முஜிபுர் ரஹ்மான், றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியவர்களில் ஒருவருடனேயே செல்வேன் என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## வெள்ள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கு தற்போது அமெரிக்கா வழங்கியுள்ளது.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் அதுல் ஹெசாப், அமெரிக்க மக்களால் நேசிக்கப்படும் இலங்கை மக்களது உயிரிழப்புக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் இலங்கை மக்களுக்காக பிரார்த்திப்பதாகவும் கூறியிருந்தார்.

அதேநேரம், நிவாரணப் பொருட்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் அடங்கிய மூன்று இந்தியக் கப்பல்களும் தற்போது நாட்டை வந்தடைந்துள்ளன. இலங்கை அரசினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவான முதலாவது கப்பலான ஐ.எஸ்.என். கிறிச் நேற்று முன்தினம் சனியன்று கொழும்பை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஐ.எஸ்.என். சார்டுல், ஐ.எஸ்.என். ஜலஸ்வா ஆகிய இரண்டு கப்பல்களும் நேற்று கொழும்பை வந்தடைந்தன.

இந்த கப்பல்களில்; உடைகள், உலர் உணவுப்பொருட்கள், குடிநீர்ப்போத்தல்கள் மருந்துப்பொருட்களுடன் வைத்திய தேவைக்கான விசேட மருத்துவக்குழு ஒன்றும் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நஷ்ட ஈட்டை வழங்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித கதியில் வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழைக்காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவினால் மட்டும் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 146 பேர் இதுவரை பலியாகியுள்ளதோடு, 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசினால் ஆரம்பக் கட்டமாக 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாகவும் நிதியினை ஒதுக்க தற்போது நடவடிக்கை எடுத்துள்ள அரசானது, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் அடங்கியப் பொதிகளை இரத்மலாண விமானப்படை முகாம் சூழலுக்கு வந்து ஒப்படைக்குமாறும் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்தோடு, குறித்த 7 மாவட்டங்களில் இருக்கும் அரச அதிகாரிகள் தொகை போதுமான அளவு காணப்படாவிடின், அதனை சூழவுள்ள மாவட்டங்களில் பணிபுரியும் அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், பாதிப்புக்குள்ளாகியுள்ள பிரதேசங்களில் 15 குழுக்களைச் சேர்ந்த 1500 இராணுவத்தினர் மீட்பு நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் கடற்படையின் உதவியுடன் 30 படகுகள் மீட்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா ஜனாதிபதி அனுதாபம்

151 பேரின் உயிர்களைக் காவு கொண்டு மேலும் சுமார் 5 இலட்சம் பேரை இடம்பெயரச் செய்த இலங்கையின் இயற்கை அனர்த்தத்துக்கு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது அனுதாபத்தை இலங்கை அரசாங்கத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா கிரமிழன் மாளிகையின் உத்தியோகபூர்வ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## வியாங்கல்லை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளிக்கிழமை அதிகாலை களுகங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக குடலகமை உட்பட்ட பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கின.

வெள்ளத்திலிருந்து தப்புவதற்காக தம் வீடுகளிலிருந்து பொருட்களை மேலேயுள்ள வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு முன், தூங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை மேலேயுள்ள வீடொன்றுக்கு எடுத்துச் சென்று தூங்க வைத்துள்ளனர்.

இவ்வாறு தூங்க வைத்திருந்த வீடும் மற்றொரு வீடும் மண்சரிவுக்குள்ளாக்கப்பட்டதனால் தூங்கிக் கொண்டிருந்த பிள்ளைகள் பிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

பிரதேசவாசிகள் மேற்கொண்ட தேடுதலின் போது நான்கு பிள்ளைகளது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சடலங்கள் புதையுண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

## நாட்டில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மீனவர்கள் அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் குறிப்பிட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தில் மீண்டும் மழை அதிகரிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய கடும் மழை ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதனால், சில இடங்களில் சுமார் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என கூறியுள்ளது.

விசேடமாக, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளையில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடி மழை பெய்யக்கூடும் என்பதால்; சாய்வு நிலங்களிலிருந்து மக்கள உடனடியாக வெளியேறுமாறு மேற்படி திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், நாட்டின் ஊடாக 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் தற்போது வீசும் காற்றின் வேகமானது மழை பெய்யும் போது அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அது தெரிவித்துள்ளது.

## உண்ணாவிரதத்தை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

40 நாட்களாக இஸ்ரேலிய சிறைகளில் உண்ணாவிரதம் இருந்து வந்த பலஸ்தீன சிறைக்கைதிகள் தமது உண்ணாவிரதத்தை சனியன்று இடைநிறுத்தியுள்ளனர்.

தமது குடும்பத்தவர்களுக்கு மாதத்துக்கு இருமுறை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து தம்மைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து உண்ணாவிரதத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

பலஸ்தீன சிறைக்கைதிகளின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியென பலஸ்தீன தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநோன்பு ஆரம்பத்துடன் உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

## தந்துரை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசத்தில் உருவான பதட்டநிலை இப்போது தணிந்துள்ளதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் நவமணிக்குத் தெரிவித்தார்.

கடுகன்னாவை பொலிஸ் பிரதேசத்துக் குட்பட்ட தந்துறை முஸ்லிம் கிராமத்தில் இளைஞர் ஒருவர் முகநூலில் புத்த பெருமான் தொடர்பாக எழுதிய விடயத்தையடுத்து தந்துறையை தாக்குவதற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிலர் கம்பு, பொல்லுகளுடன் வந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அமைச்சர்களான எம். எச். ஏ. ஹலீம் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் அசாத் சாலி மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம். லாபீர், ஹிதாயத் சத்தார் உட்பட பலரும் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து பிரதேசத்தின் பாதுகாப்பிற்கு விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

சனியன்று இரவு மாகாணசபை உறுப்பினர்களான ஹிதாயத் சத்தார் மற்றும் எம்.லாபீர் ஆகியோர் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தந்துறைக்கு விஜயம் செய்து நிலமையினை நேரில் கண்டறிந்தனர்.

முகநூலில் எழுதியதாக் கூறும் சுஹைல் அலி என்ற 23 வயது வாலிபரும் முஸ்லிம் வீடுகளுக்கு கற்களை வீசியதற்காக இரு சிங்கள வாலிபர்களும் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். மற்றொருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இது தொடர்பாக தபால் தபால்சேவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தாவது,

புத்தர் பற்றி விமர்சனம் செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட முஸ்லிம் இளைஞரை கேட்டு நேற்றிரவு சுற்றியுள்ள சிங்கள கிராம வாசிகள் வீடுகளுக்கு கல்லால் தாக்கி பதற்றத்தை தோற்றுவித்தனர். இதே நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையால் முஸ்லிம்கள் பெரும் பீதியடைந்திருந்தனர். பிரதிப் பொலிஸ் மாஅதிபருடன் தொடர்பு கொண்டு உடன் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. துண்டிக்கப்பட்டிருந்த மின்சாரமும் மீண்டும் வழங்கி வைக்கப்பட்டது. மேலதிகமாக கம்பளையிலிருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் முஸ்லிம் இளைஞர் பற்றிய விவகாரம் இருநாட்களுக்கு முன்னர் கடுக்கன்னாவைப் பொலிஸில் வைத்து குறித்த இளைஞர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் மூலம் சமதானத்தில் முடிவடைந்திருந்தது. ஆயினும் சிங்கள முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் ஒரு சிலரின் தூண்டுதல் காரணமாக குழப்பத்தை உண்டு பண்ண முயற்சி செய்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அப்பிரதேச விஹாராதிபதியுடன் நான் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு இரு தரப்பினருக்கு மத்தியில் ஒரு சமூகமான நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 5 இலட்சம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கேகாலை மாவட்டத்தை பொறுத்தவரை 1439 குடும்பங்களைச் சேர்ந்த 5262 பாதிக்கப்பட்டுள்ளதோடு, இருவர் பலியாகியுள்ளனர் என்றும் இருவர் காணாமல் போயுள்ளனர் என்றும் 9 வீடுகள் முழுமையாக சேதமாகியுள்ளன என்றும் மேற்படி நிலையமானது தகவல் வெளியிட்டுள்ளது.

அத்தோடு, மாத்தளை மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும் கண்டியில் 9 குடும்பங்களில் 40 பேரும் வவுனியாவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேரும் முல்லைத்தீவில் 26 குடும்பங்களில் 70 பேரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தை அடுத்து மழைவீழ்ச்சியினால் அதிகமாக பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்தில் 43 பேர் பலியாகியுள்ளதோடு, 21,346 குடும்பங்களைச் சேர்ந்த 78, 933 பேர் பாதிக்கப்பட்டும் 68 பேர் காணாமல்போயும் உள்ளனர்.

மேலும், 47 வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ள இம்மாவட்டத்தில் 1398 குடும்பங்களைச் சேர்ந்த 5225 பேர் தற்போது 28 நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையில், இதுவரை 14 பேர் பலியாகியுள்ளதோடு, 23,530 குடும்பங்களைச் சேர்ந்த 85, 969 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு 16 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, 7676 குடும்பங்களைச் சேர்ந்த 31,479 பேர் தற்போது 29 நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் இதுவரை 8 பேர் பலியாகியுள்ளனர். 36,314 குடும்பங்களைச் சேர்ந்த 14,2149 பாதிக்கப்பட்டுள்ளதோடு 74 வீடுகளும் இங்கு முற்றாக அழிவடைந்துள்ளன.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இங்கு 5 பேர் பலியாகியுள்ளதோடு, 1073 குடும்பங்களின் 3827 பேர் பாதிக்கப்பட்டும் 23 வீடுகள் முழுமையாக சேதமடைந்தும் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கம்பஹா மாவட்டத்தின் மூன்று மரணங்கள் நிகழ்ந்துள்ளதோடு, 8155 குடும்பங்களைச் சேர்ந்த 34, 357 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கொழும்பில் 5567 குடும்பங்களில் 21,370 பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று தனது அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

மேற்படி 12 மாவட்டங்களைத் தவிர, மட்டக்களப்பு, திருகோணமலை, துவரெலியாவிலும் பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டது.

அந்தவகையில், இந்த 15 மாவட்டங்களிலும் இதுவரை மொத்தமாக 146 பேர் பலியாகியுள்ளதோடு, ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 124 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 42 ஆயிரத்து 299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 230 வீடுகள் முழுமையாகவும் 1701 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் தற்போது கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், 24,603 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து, ஆயிரத்து 638 பேர் 319 நலன்புரி முகாம்களில் தற்போது பாதுகாப்பான முறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



# கவுண்டி கிரிக்கெட்டில் சங்கா புதிய சாதனை

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கவுண்டி கிரிக்கெட் முதல் தர போட்டியில் எசெக்ஸ் அணிக்கு எதிராக இரட்டைச் சதம் குவித்த இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும், சர்ரே அணிக்காக விளையாடி வருகின்ற குமார் சங்கக்கார, சுமார் 14 வருடங்களுக்குப் பிறகு கவுண்டி போட்டிகளுக்காக வருடமொன்றில் தொடர்ச்சியாக 5 சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.முன்னதாக 2003 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி, தொடர்ச்சியாக 5 சதங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உள்ளூர் கவுண்டி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் சர்ரே அணியும், எசெக்ஸ் அணியும் மோதின.சர்ரே அணி சார்பாக விளையாடிய இலங்கை அணியின் முன்னாள் வீரர் சங்கக்கார அபாரமாக விளையாடி முதல்தரப் போட்டிகளில் தனது 13ஆவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.இதில் 11 இரட்டைச் சதங்களை அவர் டெஸ்ட் போட்டிகளில் பெற்றுக்கொண்டார். அத்துடன், தொடர்ச்சியாக கவுண்டி கிரிக்கெட்டில் 5 சதங்கள் அடித்த உலகின் 8ஆவது வீரராகவும், இலங்கையின் முதல் வீரராகவும் புதிய சாதனையை படைத்தார்.மேலும் சர்ரே அணி சார்பில் இந்த சாதனையை படைத்த முதல் வீரராகவும் இடம்பிடித்தார். முன்னதாக நடைபெற்ற நான்கு டெஸ்ட் போட்டிகளில் முறையே 136, 105, 114 மற்றும் 116* என்ற ஓட்டங்களை அவர் குவித்திருந்தார்.

39 வயதான சங்ககக்கார, முதல்தரப் போட்டிகளில் 20 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட முதல் வீரராகவும் இடம் பெற்ற நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் உள்ளூர் முதல் தர போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக ஏற்கனவே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குத்துச்சண்டை சம்மேளன தலைவராக டயன் தெரிவு



இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்தின் புதிய தலைவராக டயன் கோமஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தலைவர் பதவிக்கான போட்டியில் இவர் ஏகமனதாக எதிர்வரும் 4 வருடங்களுக்கு புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் குத்துச்சண்டை விளையாட்டின் பிதாமகன் என்றழைக்கப்படுகின்ற இவர், பல நட்சத்திர வீரர்களை உருவாக்கிய பெருமையைக் கொண்டவராவார். 2004 முதல் 2008 வரையான காலப்பகுதியில் இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்தின் புதிய செயலாளராக இலங்கை விமானப்படையின் ஸ்க்ரோடன் அதிகாரி மொஹமட் சப்ராஸ் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹேலவின் புதிய அவதாரம்



இந்தியாவில் நடைபெற்று முடிந்த பத்தாவது ஐ.பி.எல் தொடரில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான மஹேல ஜயவர்தன முத்தடவையாக மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைமை பயிற்சியாளராக பணியாற்றினார்.அவருடைய பயிற்சியின் மூலம் மும்பை அணி 2017ஆம் ஆண்டிற்கான ஐ.பி.எல் தொடரின் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றி சாதனை படைத்தது.

இதைத் தொடர்ந்து மஹேலவுக்கு பங்களாதேஷில் நடைபெற்றுவருகின்ற பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் குல்னா டைட்டன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே அவ்வணியின் பயிற்றுனராகக் கடமையாற்றி அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் ஸ்டுவர்ட் லோ, தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டு வருகின்ற காரணத்தால் மஹேலவை அவ்வணியின் பயிற்சியாளராக நியமிக்க அவ்வணி தீர்மானித்துள்ளது. எனினும் மஹேல, பி.பி.எல் தொடரின் டாக்கா டைனமைட்ஸ் அணிக்காக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பி.பி.எல் தொடரில் குல்னா அணியின் பயிற்றுவிப்பாளராக அவர் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு தலைமை பயிற்சியாளராக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மஹேல கருத்து தெரிவிக்கையில், கடந்த வருடம் பி.பி.எல் தொடர்களில் விளையாடியதன் மூலம் பல அனுபவங்களை வீரர்களுடன் பகிர்ந்து கொண்டேன்.எனவே இந்த வருடம் அணியொன்றை சிறப்பாக வழிநடத்துவதற்கான பணியை மேற்கொள்ளவுள்ளேன் என்றார். கடந்த 2015ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற மஹேல, முன்னதாக இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.5ஆவது தடவையாக நடைபெறவுள்ள இவ்வருடத்திற்கான பி.பி.எல் தொடர் எதிர்வரும் நவம்பர் 04 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

# சம்பியன் கிண்ண கிரிக்கெட்:
# பயிற்சிப் போட்டிகளில் இலங்கை, வங்கதேசம் தோல்வி





இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரிற்கு முன் நடைபெறுகின்ற முதலாவது பயிற்சி ஆட்டத்தில் இலங்கையை 2 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா தோற்கடித்தது.லண்டன் ஓவல் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் டேவிட் வோர்னர் பந்துவீச முடிவெடுத்தார்.அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மெத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 318 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை தரப்பில் மெத்யூஸ் 95 ஓட்டங்களையும், அசேல குணரத்ன 70 ஓட்டங்களையும் குவித்தார், அவுஸ்திரேலிய தரப்பில் மோசேஸ் ஹென்ரிக்ஸ் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

319 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 49.4 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 2 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றது.அவுஸ்திரேலியா அணி சார்பில் ஆரோன் பின்ச்சு 137 ஓட்டங்களை விளாசினார். இலங்கை சார்பில் நுவன் பிரதீப் 3 விக்கெட்டுகளையும், லக்ஷான் சந்தகென் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், சம்பியன்ஸ் கிண்ண தொடரின் 2ஆவது பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.எட்ஜ்பெஸ்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் 23 வயதான இளம் துடுப்பாட்ட வீரர் பாஹிம் அஷ்ரப்பின் அதிரடி ஆட்டத்தால் இந்த வெற்றி பதிவாகியுள்ளது.நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 341 ஓட்டங்களை பெற்றது.பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தில், தமிம் இக்பால் 102 ஓட்டங்களையும் இம்ருல் கைஸ் 61 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஜுனைட் கான் 4 விக்கெட்டுகளையும், ஹசன் அலி மற்றும் ஷாதாப் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 342 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 342 ஓட்டங்களை பெற்று 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்தது. பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில், ஷொய்ப் மலிக் 72 ஓட்டங்களையும் பாஹிம் அஸ்ரப் 64 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், ஹசன் மிராஸ் 2 விக்கெட்டுகளை கைப்பற்றிவிருந்தார்.

# கோபா டெல் ரே கால்பந்து சம்பியனானது பார்சிலோனா



கோபா டெல் ரே கால்பந்து தொடரின் பார்சிலோனா அணி, இறுதிப் போட்டியில் அலாவெஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தக்கவைத்தது.

ஸ்பெய்னில் உள்ள கால்பந்து கழகங்களுக்கு இடையே கோபா டெல் ரே தொடர் நடைபெற்று வருகிறது. இந்த சீசனுக்கான இறுதிப் போட்டி மெட்ரிட் நகரில் நடைபெற்றது. இதில், பார்சிலோனா, அலாவெஸ் அணிகள் மோதின. போட்டியின் 30ஆவது நிமிடத்தில் மெஸ்சி பார்சிலோனாவுக்கு முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதற்கு, எதிரணி சார்பில் பெர்னார்ட் (33ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்து சமநிலைப் படுத்தினார்.

இதனையடுத்து தன் பங்கிற்கு பார்சிலோனாவின் நெய்மர் (45), அல்காசர் (45+3) தலா ஒரு கோல் அடித்து பார்சிலோனா அணியை 3-1 என முன்னிலை பெறவைத்தனர். இரண்டாவது பாதியில் இரு அணியினரும் கூடுதலாக கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில், பார்சிலோனா அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. மூன்றாவது முறை:

இதன் மூலம், பார்சிலோனா அணி இத்தொடரில் தொடர்ந்து மூன்றாவது முறையாக (2014-15, 15-16, 16-17) பட்டம் வென்றது. இத்தொடரில், அதிக முறை (29) சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிய அணிகள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

***



பொரளை அஹதிய்யா பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அஹதிய்யா பாடசாலை அதிபர் ஸிப்லி ஹாசிம் தலைமையில் தெமட்டகொடை அல்-ஹிஜ்ரா ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது.இதன்போது கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலை தலைவர் எம்.ஆர்.எம்.சரூக் உரையாற்றுவதையும், பிரதம அதிதியாக கலந்துகொண்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் வெற்றிபெற்ற மஹ்மூத் இல்லத் தலைவரிடம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் பொரளை அஹதிய்யா பாடசாலை அதிபர் ஸிப்லி ஹாசிம், வெற்றி பெற்ற இல்லத்தின் பொறுப்பாசிரியை பாத்திமா ஸிரானா ஹமீட், வேக்கந்தை ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் பசீர்.எம்.லத்தீப் ஆகியோர்கள் உடன் காணப்படுவதையும் மட்டக்குளி முகத்துவார அஹதிய்யா பாடசாலை அதிபர் எம்.எம்.எம்.முஸம்மில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இல்ல விளையாட்டு விழா கலாசாலை மைதானத்தின் அதிபர் மௌலவி ஏ.சி.எம்.சுபைர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட றூமி இல்லத்திற்கான சம்பியன் கிண்ணத்தினை கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான பிரதம ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார வழங்குவதையும் இரண்டாமிடம் பெற்ற இக்பால் இல்லத்திற்கான கிண்ணத்தினை அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எம்.ஐ.எம்.நவாஸ் உள்ளிட்ட அதிதிகள் வழங்குவதையும், கயிறிழுத்தல் மற்றும் வினோத உடைப் போட்டி ஆகியன இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - எஸ்.எம் அறூஸ்/எம்.ஏ.றமீஸ்)

# றொனால்டோவுக்கு வரி ஏய்ப்பு புகார்



போர்த்துக்கல் அணியின் முன்னணி கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, சம்பாதித்த வருமானத்திற்கு உரிய வகையில் வரி கட்டவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.முன்னணி கழக அணியான ரியல் மெட்ரிட் அணிக்காக விளையாடி வரும் அவர், அதில் வரும் வருவாய் மற்றும் விளம்பரங்கள் மூலம் வரும் பல கோடி ரூபாய்க்கு உரிய வகையில் வரி கட்டவில்லை என ஸ்பெயின் நாட்டின் வரித்துறை அதிகாரிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். றொனால்டோ, சுமார் 8.95 மில்லியன் டொலர்கள் அளவிற்கு மோசடி செய்துள்ளதாக கருதுகின்றனர்.

கிறிஸ்டியானோ றொனால்டோ 2011ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரை தனது படத்தை விளம்பரத்துக்கு பயன்படுத்துவதற்கான உரிமை குறித்து சரியான தகவலை தெரிவிக்கவில்லை என்று ஸ்பெயின் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதன் அடிப்படையில் இந்த விவகாரம் வெளி வந்துள்ளது. ஒரு வேளை வருமான வரித்துறையினர் விசாரணை நடத்தி, றொனால்டோ மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு வருடத்திற்கு நான்கு மாதம் என 12 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும் என சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர்.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 29th MAY 2017